بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 4

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

17 ஜமாதியுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 24 சுலஹ் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
24 ஜனவரி 2019

## அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِيْنَ يَقُوْلُوْنَ
رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا
ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ○

பொருள்: இத்தகையவர்கள், எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களுக்கு எங்கள் பாவங்களை மன்னித்தருள்வாயாக; எங்களை நரகத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக என்று கூறுவர் (3:17)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுஃல்லாஹுஃ தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**அன்பிற்குரியவர்களே! இது மார்க்க வளர்ச்சிக்காகவும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்கான தருணமாகும். இத்தருணத்தை ஒரு பாக்கியமாகக் கருதுங்கள். இது பின்னர் ஒருபோதும் உங்கள் கைக்கு வரப்போவதில்லை. ஸக்காத்து கொடுக்கக் கூடியவர் தனது ஸக்காத்தை இவ்விடத்திற்கே அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வீணாகச் செலவு செய்வதிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இறைவனது அருட்கொடைகளையும் ரூஹுல் குத்ஸ் என்னும் பரிசுத்த ஆவியின் சன்மானத்தையும் பெற ஒவ்வொரு விதத்திலும் உள்ளத் தூய்மையுடன் செயல்படுங்கள்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் [நூஹ் நபியின் கப்பல்] என்ற நூலிலிருந்து...**

நமது ஜமாஅத்தில் இறையச்சம் அதிகரிக்கவும் பூமியின் மீது பொங்கி எழுந்து கொண்டிருக்கும் இறைவனது கோபம் அவர்கள் மீது உண்டாகமலிருக்கவும் அதற்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக மாறவும் பிளேக் என்னும் கொடிய வியாதி இருந்து வரும் நாள்களில் அவர்கள் சிறப்பாக காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கங்களுக்காகவே இந்த எல்லா அறிவுரைகளையும் நாம் இங்கு எழுதியுள்ளோம்.

உண்மையான தக்வா என்னும் இறையச்சமே (பரிதாபம்! அது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது) இறைவனுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும் சாதாரண நிலையில் அல்லாமல் அடையாளம் என்ற நிலையில் முழுமையான இறை அடியானையே ஆபத்துகளிலிருந்து இறைவன் காப்பாற்றுகிறான். ஒவ்வொரு வஞ்சகனும் அல்லது அறிவீனனும் தன்னை இறை அடியான் என வாதம் செய்கின்றான். ஆனால் எவர் இறை அடையாளத்தைக் கொண்டு இறை அடியாராக நிரூபிக்கப்படுவாரோ அவரே உண்மையான இறை அடியார் ஆவார்.

நான் இறைவனை நேசிக்கிறேன் என்று ஒவ்வொருவனும் கூறிக் கொள்ள முடியும். ஆனால் நேசிப்பதை வானத்தின் சாட்சியத்தைக் கொண்டு நிரூபித்தால்தான் அவன் இறைவனை நேசிப்பவனாவான். தன்னுடைய மதமே உண்மையானது என ஒவ்வொருவரும் கூறிக் கொள்கிறார். ஆனால் எவருக்கு இவ்வுலகிலேயே (ஆன்மீக) ஒளி கிடைக்கின்றதோ அவர் சார்ந்துள்ள மதமே உண்மையானதாகும். ஒவ்வொருவரும் தனக்கு இரட்சிப்புக் கிடைக்கும் எனக் கூறிக் கொள்கிறார். ஆனால் எவர் இதே உலகில் இரட்சிப்பின் ஒளியைக் காண்பாரோ அவரே அக்கூற்றில் உண்மையானவராக இருக்கிறார்.

ஆகவே நீங்கள் ஒவ்வொரு ஆபத்திலிருந்தும் இரட்சிப்பு பெறும் பொருட்டு இறைவனுக்குப் பிரியமுள்ளவர்களாக மாற முயலுங்கள். முழுமை தன்மையுள்ள இறை அடியாரே பிளேக்கிலிருந்து நிச்சயமாகக் காப்பாற்றப்படுவார். ஏனெனில் அவர் இறைவனின் பாதுகாப்பிலேயே இருந்து வருகிறார்.

ஆகவே நீங்கள் முழுமையான இறையச்சமுடையவர்களாக மாறுங்கள். இறைவன் பிளேக்கை குறித்து கூறியவற்றையெல்லாம் நீங்கள் கேட்டிருக்கின்றீர்கள். அது ஒரு கோபத்தின் நெருப்பாய் இருக்கிறது. ஆகவே நீங்கள் அந்நெருப்பிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். எந்த மனிதர் என்னை உண்மையாகப் பின்பற்றுகிறாரோ எவரிடம் எவ்வித மோசமும், சோம்பலும் கவனமின்மையும் காணப்படுவதில்லையோ, எவர் நன்மையுடன் தீமையைக் கலக்கிறதில்லையோ அவரே காப்பாற்றப்படுவார்.

இதற்கு மாறாக எவன் இவ்வழியில் சோம்பேறித்தனமாக கால் எடுத்து வைப்பானோ மேலும் தக்வா என்னும் இறையச்சத்தின் வழிகளில் முழுமையாகச் செயல்படுவதில்லையோ அல்லது உலக இச்சைகளில் மூழ்கிக் கிடக்கின்றானோ அவன் தன்னைத்தானே சோதனையில் ஆழ்த்துகிறான். ஆகவே நீங்கள் எல்லா வகையிலும் இறைவனுக்குக் கீழ்ப்படியுங்கள். தன்னை பைஅத் என்னும் உடன்படிக்கையில் இணைத்துக் கொண்ட ஒருவர் தனது பொருளைக் கொண்டு இந்த ஜமாஅத்திற்கு ஊழியம் செய்ய இது உரிய நேரமாகும். எந்த மனிதர் ஒரு பைசா கொடுக்க சக்தியுள்ளவராய் இருப்பாரோ அவர் இந்த ஜமாஅத்தின் செலவுக்காக ஒவ்வொரு மாதமும் ஒரு பைசா வீதம் கொடுத்து வர வேண்டும். மேலும் எவரால் மாதாமாதம் ஒரு ரூபாய் கொடுக்க முடியுமோ அவர் மாதாமாதம் ஒரு ரூபாய் வீதம் கொடுத்து வர வேண்டும்.

ஏனெனில் (உணவு தயாரித்து இலவசமாக விநியோகிக்கும் உணவு விடுதியாகிய) லங்கர் கானாவின் செலவுகளைத் தவிர மார்க்கப் பணிகளுக்காகவும் பெரும் அளவிலான பணம் தேவைப்படுகிறது. நூற்றுக்கணக்கான விருந்தாளிகள் வருகை தருகிறார்கள். ஆயினும்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். எனது மனைவிடம் நன்மையைத் தவிர வேறு எந்தவொரு விஷயமும் எனக்குத் தெரியாது**

**பத்ர் போரில் கலந்து கொண்ட மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நற்குறிப்பு. அல்லாஹ் அவர்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14 டிசம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஸஹாபாக்களின் நற்கூற்றில் இன்று **ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா** பற்றி கூறுவேன். இவர்களின் பெயர் அவ்ஃப். சுட்டுப்பெயர் மிஸ்தாஹ் என்பதாகும். இவர்களது தாயார் உம்மே மிஸ்தாஹ் ஸல்மா பின்த் சகர் ஆவார். இவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய சிற்றன்னை ரேதா பின்த் சகரின் மகள் ஆவார்.

(அல் அஸாபா தொகுதி 6 பக்கம் 74 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1995–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 150 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 2003–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் தொகுதி 4 பக்கம் 1472 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா அவர்கள், ஹஸ்ரத் உவைஸ் பின் ஹாரிஸ் உடைய இரு சகோதரர்களான துஃபைல் பின் ஹாரிஸ், ஹுஸைன் பின் ஹாரிஸ் ஆகிய இருவருடனும் மக்காவை நோக்கிச் சென்றார். பயணத்தை முடிக்கும் முன் நாஜி என்ற பள்ளத்தாக்கில் ஒன்று கூட வேண்டும் என்பது அவர்களது திட்டமாக இருந்தது. ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா பின்தங்கி விட்டார்கள்.

பயணத்தில் அவர்களை ஒரு பாம்பு தீண்டி விட்டது. முன் சென்று விட்டவர்களுக்கு மறுநாள்தான் ஹஸ்ரத் மிஸ்தாஹ்வை பாம்பு தீண்டிய செய்தி கிடைத்தது. உடனே அம்மக்கள் திரும்பி வந்தனர். மிஸ்தாவை அழைத்துக் கொண்டு மதீனா திரும்பினர். அனைவரும் மதீனாவில் அப்துர் ரஹ்மான் பின் ஸல்மாவின் வீட்டில் தங்கினர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 37 உபைதா பின் ஹாரிஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஸ்தாஹ் பின் உஸாஸா, ஹஸ்ரத் ஸைத் பின் முஸைய்யன் இருவருக்கும் இடையில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். ஹஸ்ரத் மிஸ்தாஹ் அவர்கள் பத்ர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 39 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத்திற்கு எட்டு மாதங்கள் கழித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை 60 அல்லது ஓர் அறிவிப்பின்படி 80 வாகனங்களுடன் அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உபைதா பின் ஹாரிஸ் அவர்களிடம் ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டி விட்டார்கள். இந்தக் கொடியை மிஸ்தாஹ் பெற்றார்கள். அந்த குழுவின் நோக்கம் குறைஷி கோத்திரத்தை தடுத்து நிறுத்துவதாகும். அப்போது அக்குறைஷி பயணக்குழுவின் அமீராக அபூ ஸுஃப்யான் இருந்தார்கள். சில அறிவிப்பின்படி இக்ரிமா பின் அபிஜஹ்ல், இன்னும் சில அறிவிப்பின்படி மக்ரஸ் பின் ஹப்ஸ் தலைவராக இருந்தார்கள். இந்தக் குழுவில் 200 பேர் இருந்தனர். இவர்கள் பொருள்களைக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். சஹாபாக்களின் ஜமாஅத் ராபிக் என்ற பள்ளத்தாக்கில் அந்தக் குழுவை சந்தித்தனர். அதனை வதான் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் குழு ஒரு வணிகக் குழு அல்ல. அவர்களிடம் போர்த் தளவாடங்களும் இருந்தன. அவை போர்களில் பயன்படுத்தக் கூடியவையாக இருந்தன. சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது அவர்கள் போருக்கு முழுமையாக ஆயத்தத்துடன் வந்திருந்தனர். சென்ற இரு குழுவினருக்கும் இடையில் அம்புகள் வீசப்பட்டதுடன் வேறு எந்த சண்டையும் நடக்கவில்லை. சண்டைக்கான வேறு எந்த விஷயமும் நடக்கவில்லை. வியூகம் அமைக்கவும் இல்லை.

ஒரு சஹாபி பற்றி முன்னர் கூறும்போது இவற்றைக் கூறியுள்ளேன். முஸ்லிம்களின் தரப்பிலிருந்து முதலில் அம்பை எய்தவர் சஅத் பின் அபீ வக்காஸ் ஆவார்கள். இஸ்லாத்தின் தரப்பிலிருந்து செலுத்தப்பட்ட முதல் அம்பு இதுவாகும். அப்போது மிக்தாது பின் அஸ்வத் மற்றும் உவைனா பின் கஸ்வான் என்ற இருவரும் இணை வைப்பவர்களின் தரப்பிலிருந்து முஸ்லிம்களிடம் வந்து சேர்ந்து கொண்டனர் என்று ஸீரத் இப்னு ஹிசாம் தாரிகே தப்ரியிலும் எழுதப்பட்டுள்ளது. உவைனா பின் கஸ்வான் இணை வைப்பவர்களை விட்டு விட்டு முஸ்லிம்களுடன் வந்து சேர்ந்து கொண்டார். இருவரும் முன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் பக்கம் செல்ல விரும்பினர்.

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் தலைமையில் இன்னொரு குழு வந்தது. அம்புகள் செலுத்தப்பட்ட பின் இக்குழுவும் பின்வாங்கி விட்டது. முஸ்லிம்களைப் பற்றி இணை வைப்பவர்களிடம் ஒருவகையான பயம் உருவானது என்பதை முன்னர் ஒருமுறை குத்பாவில் நான் கூறியுள்ளேன். முஸ்லிம்களிடம் பெரும் படை இருக்கிறது. அவர்கள் உதவிக்கு வருவார்கள் என்று கருதினர். இவ்வாறு பயந்து திரும்பிச் சென்றனர். முஸ்லிம்களும் கூட அவர்களைப் பின்தொடரவில்லை.

(அச்சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 215–216 சரய்யா உபைதா பின் ஹாரிஸ் (ரலி) – 2002–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது & சீரத் இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 592 சரய்யா உபைதா பின் ஹாரிஸ் (ரலி) – 1955 ஆம் ஆண்டு மிஸ்ரில் அச்சடிக்கப்பட்டது & தாரீக் அத்திப்ரா தொகுதி 2 பக்கம் 12 – 1987–ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

காரணம், அவர்களின் நோக்கம் இணை வைப்பவர்களை தடுப்பது மட்டும்தான். முஸ்லிம்களுக்கு எதிராக ஆயத்தம் செய்தால் முஸ்லிம்களும் அதற்கு தயார் என்று பாடம் கற்பிப்பதுதான் நோக்கமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபரின்போது மிஸ்தாஹ் மற்றும் இப்னு இல்யாஸ் இருவருக்கும் 50 வஸக் (அளவு) கிலா வழங்கினார்கள். அது அப்போது கிடைக்கும் பொருள் போர்ப் பொருளாக வழங்கப்பட்டது. திப்காத்துல் குப்ரா வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது.

இவர்கள் 56 வயதில் ஹிஜ்ரி 34 –ல் உஸ்மான் (ரலி) உடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத் ஆனார்கள் என்றும் கூறப்படுகிறது. மேலும் அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் நடந்த ஸபீன் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டார்கள். அதே வருடம் ஹிஜ்ரி 37–ல் வஃபாத் ஆனார் என்று கூறப்படுகிறது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 39 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 39 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிஸ்தாஹ் அவர்கள் யார் என்றால் அவரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உணவளித்து கவனித்து வந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டபோது அவ்வாறு அவதூறு கூறியவர்களில் ஹஸ்ரத் மிஸ்தாஹ்வும் இணைந்து விட்டார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருங்காலத்தில் தாம் இவருக்கு எந்த உதவியும் செய்யப்போவதில்லை என்று சத்தியம் செய்தார்கள்.

பிறகு இது குறித்து திருக்குர்ஆனில் இந்த வசனம் இறங்கியது.

وَلَا يَأْتَلِ أُولُو الْفَضْلِ مِنْكُمْ وَالسَّعَةِ أَنْ يُؤْتُوا أُولِي الْقُرْبَى وَالْمَسَاكِينَ وَالْمُهَاجِرِينَ فِي
سَبِيلِ اللَّهِ وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا ۔ أَلَا تُحِبُّونَ أَنْ يَغْفِرَ اللَّهُ لَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ

உங்களில் வசதி படைத்தவர்கள் ஒருபோதும் ஏழைகள், வறியோர், இறை வழியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்யாதீர்கள். அவர்களை மன்னிக்க வேண்டும். கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிப்பதை விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (24:23)

எவ்வாறிருப்பினும் இந்த வசனம் இறங்கியதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனே அம்மனிதருக்கு உணவளித்து உதவிகளைத் தொடர்ந்து செய்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷாவை அல்லாஹ் குற்றமற்றவர் என்ற வசனத்தை இறக்கியதும் பழி கூறியவர்களுக்கு தண்டனையும் கொடுக்கப்பட்டது. சில அறிவிப்புகளின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறிய சஹாபிகளுக்கு சவுக்கடி கொடுக்கச் செய்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் மிஸ்தாஹ்வும் ஒருவராவார்.

(அல் அஸாபா தொகுதி 6 பக்கம் 74 மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவதூறு கூறுபவர்களைப் பற்றி கூறும்போது இவ்வாறு கூறுகின்றார்கள்: இது ஒரு முக்கியமான சம்பவமாகும். முஸ்லிம்களுக்கு இதில் படிப்பினை இருக்கிறது. எனவே இதற்கு பெரிய விளக்க உரையும் எழுதப்பட்டுள்ளது. அல்லாஹ் இது பற்றி திருக்குர்ஆனில் வசனமும் இறக்கினான்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் நற்பண்புகளில் இதனை வைத்துள்ளான். தண்டனை பற்றிய முன்னறிவிப்புகளைப் பொருத்த வரையில் தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் மூலம் அதனை தூர விலக்கி விடுகின்றான். அதேபோன்று மனிதனுக்கும் கூட அந்த நல்லொழுக்கத்தை கற்றுத் தந்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சம்பவத்தைக் கூறி நன்மைக்கான வாக்குறுதிக்கும் தண்டனைக்கான வாக்குறுதிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறியுள்ளான்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் நிரூபணமாகி உள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைப் பற்றி நயவஞ்சகர்கள் பொறாமையின் காரணமாக நடந்த நிகழ்ச்சிக்கு மாற்றமான ஓர் அவதூறைக் கூறினார்கள். அதனைப் பற்றி பேசுவதில் சில சாதாரண சஹாபாக்களும் ஈடுபட்டனர். அவர்களின் நோக்கம் குழப்பம் ஏற்படுத்துவது அல்ல. இந்த சாதாரண மக்கள் அதில் இணைந்தனர். அவர்கள் ஒரு சஹாபி யார் என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டில் இரு வேளை உணவு உண்டு வந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் அம்மனிதரின் அந்த செயலின் காரணமாக தாம் ஒரு சத்தியம் செய்தார்கள். தண்டனைக்குரிய வாக்குறுதி என்ற முறையில் ஓர் உறுதி எடுத்தார்கள். அம்மனிதரின் இந்த வீணான செயலின் காரணமாக இனி அவருக்கு நான் உணவளிக்க மாட்டேன் என்பதே அந்த உறுதிமொழி. இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு வசனம் இறங்கியது.

وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا أَلَا تُحِبُّونَ أَنْ يَغْفِرَ اللَّهُ لَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ (24:23)

உடனே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது உறுதிமொழியை விட்டு விட்டார்கள். அவருக்கு தொடர்ந்து வழக்கம்போல் உணவளித்து வந்தார்கள். இந்த அடிப்படையில் இஸ்லாமிய நல்லொழுக்கத்தில் இது உட்பட்டதாகும். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு பிரச்சனைக்கு தீர்வு வழங்கியுள்ளார்கள். அதாவது வஇத்து (தண்டனைக்குரிய வாக்குறுதி) வழங்கப்பட்டால் அதனை முறிப்பது நல்லொழுக்கத்தைச் சார்ந்ததாகும்.

உதாரணமாக, வஇது என்றால் என்ன? ஒருவர் தமது சேவையின் கீழ் இருப்பவரைப் பற்றி ஒரு சத்தியம் செய்தால் அவருக்கு நான் 50 செருப்படி கொடுப்பேன் என்று சத்தியம் செய்தால் அவரது தவ்பா மற்றும் மனம் திருந்துதல் கண்டு மன்னித்து விடுவது இஸ்லாமிய நடைமுறையாகும். அதன் மூலம் அவர் அல்லாஹ்வின் நல்லொழுக்கத்தை தனது நடைமுறை ஆக்குகிறார். ஆனால் நன்மைக்காக வாக்குறுதியில் மாற்றம் என்பது அனுமதிக்கப்பட்டது என்றாலும் கேள்விக்குட்படும். ஏனெனில் நன்மைக்கான வாக்குறுதியில் எல்லா எதிர்மறை விளைவுகளையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால் தண்டனை வாக்குறுதியில் இல்லை.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 181)

எனவே ஒரு நன்மைக்கான வாக்குறுதி தரப்பட்டால் அதனை நிறைவேற்றுவது அவசியமாகும். அதனை முறிப்பது ஒரு சுமையாகி விடும் அல்லது அதுவே தண்டனைக்குரியதாகி விடும்.

சஹீஹ் புகாரியின் அறிவிப்பின்படி ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறப்பட்ட சம்பவம் பற்றி வருகிறது. அதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு விளக்குகிறேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதாவது பயணத்திற்கு செல்வதாயின் தமது மனைவியருக்கு இடையில் சீட்டுப்போட்டு பார்ப்பார்கள். யார் பெயர் வருகிறதோ அவரை உடன் அழைத்துச் செல்வார்கள். இந்த வகையில் அன்னார் ஒரு தாக்குதல் நடந்தபோது மனைவியர்களுக்கு மத்தியில் சீட்டுக் குலுக்கிப் போட்டபோது எனது பெயர் வந்தது என்று ஹஸ்ரத் ஆயிஷா கூறுகிறார்கள். நான் அன்னாருடன் சென்றேன்.

அப்போது பர்தா அணிய வேண்டும் என்ற கட்டளை வந்து விட்டது. நான் மறைவுக்குள் இருந்தேன். ஒட்டகத்தின் மேல் பல்லக்கு போன்று செய்யப்படும். நாலாபுறமும் திரையிடப்பட்டிருக்கும். இவ்வாறு நாங்கள் பயணத்தில் சென்றோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போரிலிருந்து திரும்பினார்கள். நாங்கள் மதீனாவுக்கு அருகில் வந்து விட்டோம். ஓர் இரவு அன்னார் தங்குமாறு கட்டளையிட்டார்கள். மக்களிடம் அறிவிக்கப்பட்டதும் நான் படையை விட்டு தூர விலகி இயற்கையின் தேவைக்காகச் சென்றேன். எனது பல்லக்கின் அருகில் வந்தபோது எனது மார்பில் கை வைத்துப் பார்த்தேன்.

அந்தோ! எனது கழுத்தில் இருந்த விலை மதிப்புள்ள கருப்புக் கற்கள் பதிக்கப்பட்ட மாலை விழுந்து விட்டது. நான் திரும்பிச் சென்று எனது மாலையைத் தேடினேன். அதனை தேடுவது என்னை அங்கேயே தடுத்து வைத்து விட்டது. அப்போது எனது ஒட்டகத்தை ஆயத்தம் செய்பவர்கள் எனது பல்லக்கை தூக்கி ஒட்டகத்தின் மீது வைத்து விட்டனர். அது அப்போது காலியாக இருந்தது. நான் அதில் இருக்கிறேன் என்று அவர்கள் கருதிக் கொண்டனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: அக்காலத்தில் பெண்கள் மிகவும் ஒடிசலாக

இருந்தனர். அதிக கனமாக இருப்பதில்லை. அவர்களின் உடலில் அதிகம் சதைப்பிடிப்பு இருப்பதில்லை. பெண்கள் மிகவும் குறைவாகவே உண்பவர்களாக இருந்தனர். மக்கள் பல்லக்கை தூக்கியபோது அது அசாதாரணமாக இருப்பதில்லை. இது எடை குறைவாக உள்ளதே என்று தோன்றுவதில்லை.

ஆயிஷா கூறுகின்றார்கள்: அவர்கள் அதனை தூக்கி ஒட்டகத்தில் வைத்தனர். நான் வயதும் குறைவாக இருந்தேன். அவர்கள் ஒட்டகத்தை செலுத்தத் தொடங்கினர். முழு படையும் அந்த இடத்தைக் கடந்து சென்ற பிறகு நானும் எனது மாலையைத் தேடி எடுத்து விட்டேன். நான் திரும்பி வந்தேன். அங்கு எவரும் இல்லை. உடனே நான் எனது பல்லக்கு இருந்த அதே இடத்தில் இருந்தேன். அவர்கள் என்னை காணாமல் திரும்பி வருவர் என்று நினைத்து அமர்ந்து விட்டேன். இந்நிலையில் என் கண்கள் அயர்ந்து தூங்கி விட்டேன். சப்வான் பின் முஅத்தஸ் சக்வானி படைகளுக்குப் பின்னால் இருந்தார். படை சென்ற பிறகு எதுவும் விடப்படவில்லையே என்று பார்த்து செல்வதற்காக நின்றார். அவர் நான் தங்கி இருந்த இடத்திற்கு வந்தார். நான் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து என்னிடம் வந்தார்.

அவர் பர்தா கட்டளை வரும் முன் என்னைப் பார்த்திருந்தார். எனவே அவர் என்னைக் கண்டு இன்னா லில்லாஹ் கூறினார். அவரது இன்னா லில்லாஹ்வைக் கேட்டு நான் விழித்தேன். அவர் தனது ஒட்டகத்தை அமர்த்தி தனது கைகளை எனது காலில் வைத்து ஏறச் செய்தார். நான் அதில் ஏறி அமர்ந்தேன். அவர் அந்த ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டே சென்றார். மக்கள் நண்பகல் நேரம் ஒய்வெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் நாங்கள் மக்களை சென்று சேர்ந்தோம். அதில் அழியக் கூடியவர்கள் அழிந்து விட்டனர்.

அதாவது இதனை குறித்து அவதூறு கூறுபவர்கள் அவதூறு கூறத் தொடங்கினர். இந்த அவதூறுகளில் அமைப்பாளராக இருந்தவன் அப்துல்லாஹ் பின் அபீ ஸலூல் என்பவன் ஆவான். நாங்கள் மதீனாவுக்கு சென்று சேரவும் அப்போதே எனக்கு நோய் வந்தது. அவதூறு கூறுபவர்களின் வார்த்தைகளை வைத்து மக்கள் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். நான் நோயுற்றிருந்த நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சிறு வயதில் இருந்து நான் கண்டு வந்த பழைய தயவை காண முடியவில்லை. அவதூறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வரை சென்று சேர்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான் நோயுற்ற போது நடந்து கொள்வது போன்று நடந்து கொள்ளவில்லை. அன்னார் உள்ளே வருவார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவார்கள். அவள் எப்படி இருக்கிறாள்? என்று கேட்பார்கள்.

எனக்கு அப்போது என் மீது கூறப்பட்ட பழி அவதூறு பற்றி ஒன்றும் தெரியாது. அதனை எனது பெற்றோரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் நோயிலிருந்து நிவாரணம் பெற்றதும் நான் பலவீனமாக இருந்தேன். நானும் மிஸ்தாஹ்வின் தாயாரும் இயற்கை தேவைக்காக முனா என்ற இடத்திற்கு சென்றோம். நான் இரவில் வெளியே செல்வது வழக்கம். எங்கள் வீட்டிற்கு அருகிலேயே கழிப்பிடம் உருவாக்கப்படும் முன்பு நடந்ததாகும். அக்காலத்தில் மக்கள் தேவையை நிறைவேற்ற வெளியே தான் செல்வார்கள். பெண்கள் இரவு வேளையில் இருட்டிய பிறகு செல்வார்கள்.

நாங்கள் அரபிகளின் வழக்கப்படி இரவில் காட்டுக்குள்ளேயே இயற்கையின் தேவையை நிறைவேற்றச் சென்றோம். நானும் உம்மே மிஸ்தா பின்த் அபு ருஹ்ம் இருவரும் செல்லும்போது அவர் ஆடையால் தடுமாறினார். பிறகு மிஸ்தாஹ் பேறிழந்தான் என்று கூறினார். என்ன தீய வார்த்தையைக் கூறுகிறீர்கள்? என்று நான் கூறினேன். பத்ர் போரில் கலந்து கொண்டவரைப் பார்த்து அவ்வாறு கூறுகிறீர்களா? என்றேன்.

அவர் கூறினார்: மறதிக்கார பெண்ணே! மக்கள் இட்டுக் கட்டுவதை நீ கேட்கவில்லையா? என்று கூறியவாறு மக்கள் அவதூறு கூறுவதைப் பற்றி கூறினார். இந்த ஆட்சேபனை உம்மீது வைக்கப்படுகிறது என்று கூறினார். நான் அப்போதுதான் நோயிலிருந்து எழுந்து இருந்தேன். இதனை கேட்டு எனது நோய் அதிகமானது. நான் எனது வீட்டிற்கு திரும்பினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அஸ்ஸலாமு அலைக்கும் கூறினார்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். என் பெற்றோர் வீட்டிற்கு கொண்டு செல்ல அனுமதி தாருங்கள் என்று நான் கேட்டேன். நான் என் மீது கூறப்படுகிற அவதூறுகளைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பினேன். அன்னார் அனுமதி வழங்கினார்கள். நான் எனது பெற்றோரிடம் வந்தேன். எனது தாயாரிடம் மக்கள் என்ன கூறுகிறார்கள்? என்று கேட்டேன்.

எனது தாயார், மகளே! அதனைக் கேட்டு நீ வருத்தப்படாதே. அமைதியாக இரு. ஒருவரிடம் ஓர் அழகிய பெண் இருந்து அதனை அவர் அன்பு கொண்டிருக்கும் நிலையில் அவளைப் பற்றி எந்த அவதூறான வார்த்தைகளையும் கூறாமல் இருக்கும் மக்கள் மிகவும் குறைவாகும் என்றார். இதனைக் கேட்டு நான் சுப்ஹானல்லாஹ் என்று கூறினேன். அதனை குறித்தா சர்ச்சை செய்கின்றனர்.

அவர் கூறுகிறார்: பிறகு நான் அவ்வாறே இரவைக் கழித்தேன். காலை வரை தூங்கவில்லை. எத்தனை பெரிய அவதூறு கூறப்பட்டுள்ளது. முழு இரவும் தூக்கம் வரவில்லை. அழுது கொண்டே இருந்தேன். காலை எழுந்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அலி பின் அபீதாலிப், உஸாமா பின் ஸைத் ஆகியோரை அழைத்தார்கள். அப்போது வஹி வர சற்று தாமதம் ஆனது. அவ்விருவரிடமும் தமது மனைவியை விட்டு விடுவது தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக அழைத்தார்கள். இத்தகைய அவதூறு கூறப்பட்ட பிறகு இந்த மனைவியை உடன் வைத்துக் கொள்வதா? வேண்டாமா? என்று ஆலோசனை செய்ய விரும்பினார்கள்.

உஸாமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மனைவியர் மீதுள்ள அன்பினால் ஆலோசனை வழங்கினார்கள். அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணை! உங்கள் மனைவியரிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் நான் அறியவில்லை. எந்த குறைபாட்டையும் காணவில்லை. ஆனால் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களுக்கு எந்த நெருக்கடியும் தரவில்லையே என்றார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) சற்று துடிப்பான இயல்பு கொண்டவர்கள். எனவே அவர்கள் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள். இவரைத் தவிர இன்னும் நிறைய பெண்கள் இருக்கின்றனர். பிறகு ஹஸ்ரத் அலி இதனையும் கூறினார்கள். பணிப் பெண்ணிடம் கேளுங்கள். இவர்கள் எத்தகையவர் என்று கேளுங்கள். அவர் உண்மையை கூறுவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பரிரா என்ற பணிப்பெண்ணை அழைத்து கேட்டார்கள்.

பரிரா! ஹஸ்ரத் ஆயிஷாவிடம் சந்தேகப்படும் ஏதாது செயலைப் பார்த்தாயா? என்று கேட்டார்கள். அதற்கு பரிரா, ஒருபோதும் இல்லை என்று கூறினார்கள். உங்களை உண்மையுடன் அனுப்பிய இறைவன் மீது ஆணையாக. நான் ஹஸ்ரத் ஆயிஷாவிடம் ஒரேயொரு செயலை விட அதிகம் தவறு எதனையும் பார்க்கவில்லை. அதற்கு காரணம் அவர் வயது குறைந்த பெண் ஆவார்கள். அவர்கள் மாவை அப்படியே வைத்து விட்டு தூங்கி விடுவார்கள். வீட்டில் ஆடு வந்து அதனை தின்று விடும். இத்தகைய கவனமின்மை இருந்தது. அப்பெண் இத்தகைய ஒரே உதாரணம் கூறி விளக்கினார்.

அதாவது எந்த தீமையையும் பார்க்கவில்லை. ஒரு பலவீனம் இருந்தது. அது தூக்கம் மிகைத்து விடுகிறது. அதுதான் பலவீனம். இதனை கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவனே இதனை பிரபல்யப்படுத்தினான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் மனைவி குறித்து எனக்கு கஷ்டம் தருபவரை எவர் கவனிப்பார். நான் இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். நான் எனது மனைவியிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் பார்க்கவில்லை. யாரைப் பற்றி கூறுகின்றார்களோ அவரைப் பற்றியும் நன்மையைத் தவிர வேறு எதனையும் நான் கண்டதில்லை. எனது வீட்டினரிடம் அவர்கள் என்னுடனேயே வந்துள்ளார்கள். இதனை கூறியதும் சஅத் பின் மஆஸ் அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுக்காக இதற்குப்

பழிவாங்குவேன். இந்த பழியைக் கூறுபவர் அவ்ஸ் கோத்திரத்தவர் என்றால் அவரது தலையைக் கொய்வேன். அவர் எமது சகோதரர்களான கஸ்ரஜ் கோத்திரத்தவர் என்றால் நீங்கள் கட்டளையிடுவதை செய்வோம் என்று கூறினார்கள்.

இவர் இவ்வாறு கூறியதும் சஅத் பின் உபாதா எழுந்தார். இவர் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர் ஆவார். அவர் நல்ல மனிதராக இருந்தார். ஆனால் சமுதாயத்தின் மரியாதை அவரைத் தூண்டியது. அவர், நீர் தவறாகக் கூறுகிறீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எமது கோத்திரத்தைக் கொல்ல முடியாது. கொல்லவும் மாட்டீர். கொல்லவும் முடியாது என்றார். இவ்வாறு அங்கு வாக்குவாதம் தொடங்கியது. பிறகு உஸைர் பின் உவைது எழுந்தார். அந்த மூன்றாம் மனிதர் எழுந்து கூறினார். நீங்கள் தவறாகக் கூறுகின்றீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக நாங்கள் கண்டிப்பாக கொன்று விடுவோம்.

எவர் அவதூறு கூறினாரோ அவரைக் கொன்று விடுவோம். இதனுடன் நீர் நயவஞ்சகர் சார்பாக வாதாடுகிறீர் என்று கூறினார். இவ்வாறு அவ்ஸ், கஸ்ரஜ் இரு கோத்திரத்தாரும் எழுந்தனர். ஒருவருக்கொருவர் கோபம் கொண்டனர். சண்டை தொடங்கியது. எந்த அளவுக்கு என்றால் சண்டை தொடங்க மட்டும்தான் இல்லை. அதற்குத் தயாராகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேடையிலிருந்து இறங்கி அவர்களைச் சமாதானம் செய்தார்கள். உடனே அவர்கள் அமைதி அடைந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அமைதி ஆனார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: புகாரியின் இந்த அறிவிப்பு இவ்வாறு செல்கிறது. நான் நாள் முழுக்க அழுது கொண்டிருந்தேன். கண்ணீரால் தூக்கம் வரவில்லை. எனது பெற்றோர் என் அருகில் வந்தனர். ஒருநாள் எவ்வளவு அழுதேன் என்றால் அழுகை எனது மூச்சை நிறுத்தி விடும் என்று நினைத்தேன். நான் முடிந்தேன் என்று நினைத்தேன். எனது பெற்றோர் அருகில் அமர்ந்திருந்தார்கள். அழுது கொண்டிருந்தேன். அப்போது ஓர் அன்ஸாரி பெண் உள்ளே வர அனுமதி கேட்டார். நான் அனுமதி அளித்தேன். அவரும் அருகில் வந்து அமர்ந்து அழத் தொடங்கினார். நாங்கள் இந்த நிலையில் இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வந்து அமர்ந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வீடாக இருந்தது.

என் மீது அவதூறு கூறப்பட்ட நாள் முதல் அன்னார் என் அருகில் அமரவில்லை. அன்றுதான் அமர்ந்தார்கள். அதற்கு முன் தூரத்தில் இருந்தே பணிப்பெண்ணிடம் நிலைமைகளை விசாரித்து விட்டுச் செல்வார்கள். எவ்வாறிருப்பினும் அன்று வந்து அருகில் அமர்ந்தார்கள். அன்னார் ஒரு மாதம் எதிர்பார்த்திருந்தார்கள். என் மீது அவதூறு கூறப்பட்டதிலிருந்து அருகில் வந்து அமரவே இல்லை. ஒரு மாதம் எதிர்பார்த்தார்கள். எந்த வஹியும் இறங்கவில்லை. பழி கூறப்பட்டு ஒரு மாதம் கழிந்து விட்டது. அருகில் அமரவே இல்லை. அன்று அருகில் அமர்ந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் ஏதாவது கூறுவான் என்று எதிர்பாத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அன்னார் ஷஹாதத் ஓதியவாறு என்னிடம் கூறினார்கள். ஆயிஷாவே! உம்மைப் பற்றி எனக்கு ஒரு விஷயம் வந்து சேர்ந்துள்ளது. அப்போதுதான் அன்னார் ஹஸ்ரத் ஆயிஷாவிடம் அது குறித்து பேசினார்கள். நீங்கள் குற்றமற்றவர் எனில், அல்லாஹ் உம்மைக் குற்றமற்றவர் ஆக்கி விடுவான். உம்மிடம் ஏதாவது பலவீனம் ஏற்பட்டிருந்தால் அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுங்கள். அவனிடம் தவ்பா செய்யுங்கள். அடியான் தனது பாவத்தை ஒத்துக் கொண்டான் என்றால் அவனிடம் தவ்பா செய்தான் என்றால் அல்லாஹ்வும் அவன் மீது கருணை காட்டுகிறான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த பேச்சை முடித்ததும் எனது கண்ணீர் காய்ந்து விட்டது. நான் அதுவரை அழுது கொண்டிருந்தேன். ஒரு சொட்டு கண்ணீரைக் கூட நான் உணரவில்லை. நான் எனது தந்தையிடம் கூறினேன். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) தமது தந்தையார் அபூபக்ரிடம் கூறினார்கள். என் தரப்பில் நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பதில் கூறுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர், இறைவன் மீது ஆணையாக. எனக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ஆயிஷா, என் சார்பாக பதில் கூறுங்கள் என்று தமது தாயாரிடம் கூறினார்கள். அதற்கு, இறைவன் மீது ஆணையாக என்ன பதில் கூறுவது என்றே எனக்கு தெரியவில்லை என்று தாயாரும் கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: நான் வயதில் குறைந்த பெண் ஆவேன். திருக்குர்ஆன் குறித்து அப்போது எனக்கு அதிக அறிவு இல்லை. இருந்தும் நான் கூறினேன். இறைவன் மீது ஆணையாக. நீங்கள், மக்கள் எதனைக் குறித்து பேசுகிறார்களோ அதனைக் கேட்டுள்ளீர்கள் என்று தெரிகிறது. என் மீது பெரும் அவதூறு கூறப்பட்டுள்ளது. அது உங்கள் உள்ளத்திலும் அமர்ந்து விட்டது. நீங்கள் அதனைச் சரியானது என்று கருதி விட்டீர்கள். ஆனால் நான் கூறுகிறேன். நான் குற்றமற்றவள். அத்தகைய செயலைச் செய்யவில்லை.

நான் உண்மையில் குற்றமற்றவள். நீங்கள் இதில் என்னை உண்மையாளவள் என்று கருதவில்லை. ஏனெனில் இது இவ்வளவு பிரபல்யப்படுத்தப்பட்டு விட்டது. மக்கள் நான் உண்மையானவள் இல்லையோ என்று பேசிக் கொண்டிருக்கின்றனர். நான் இதனை கூறுகிறேன். அல்லாஹ் நன்கறிகிறான். நான் குற்றமற்றவள். நான் அத்தகைய தீய செயல் எதுவும் செய்யவில்லை. எனது உறுதிமொழியை நீங்கள் உண்மை என்று கருதவில்லை என்றாலும் சரி, அல்லது நீங்கள் உண்மை என்று ஏற்றாலும் சரி நான் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் யஃகூப் (அலை) அவர்களுடைய வார்த்தையையே கூறுவேன். பொறுமையை மேற்கொள்வதே சிறந்தது. அவனிடமே உதவி தேட வேண்டும். இவ்வார்த்தையை ஹஸ்ரத் யஃகூப் (அலை) அவர்கள் கூறினார்கள். யூசுஃப் உடைய சகோதரர்களின் விஷயத்தில் யஃகூப் (அலை) கேட்டதுபோன்று அல்லாஹ்விடமே உதவி கேட்க வேண்டியதுள்ளது என்று கூறி அந்த வசனத்தைக் கூறி விட்டு நான் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டேன்.

எனது படுக்கைக்கு வந்து விட்டேன். அல்லாஹ் எனது குற்றமின்மையை வெளிப்படுத்துவான் என்று நினைத்தேன். நான் பாவமற்றவள் என்று அவன் அறிந்துள்ளான். அல்லாஹ் எனது பாவமின்மையைக் கூறுவான் என்று நினைத்தேன். ஆனால் ஒருபோதும் நான் என்னைப் பற்றி வஹியே இறங்கும் என்று நினைக்கவில்லை. அல்லாஹ் என்னைக் குற்றமற்றவள் என்று கூறுவான் நினைத்தேன். இதற்காக எனது குற்றமின்மை குறித்து இறைவன் வஹியே இறக்குவான் என்று கருதவில்லை. திருக்குர்ஆன் கூறப்படும் அளவுக்கு அல்ல.

நான் மிகவும் குறைந்த நிலையில் உள்ளவன் என்றே கருதியிருந்தேன். அந்த அளவுக்கு என்னை நானே தகுதி உள்ளவளாகக் கருதவில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் என்னைப் பற்றி ஒரு வஹி இறக்கத்தக்கவள் என்று கருதவில்லை. ஆனால் எனக்குக் கண்டிப்பாக ஒரு நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதாவது கனவு காண்பார்கள். அதன் மூலம் அல்லாஹ் என்னைக் குற்றமற்றவளாக்கி விடுவான் என்று கருதினேன்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக. நான் விலகி தூரம் செல்லவும் இல்லை. அல்லது வீட்டில் உள்ளவர்கள் யாரும் வெளியில் செல்லவும் இல்லை. இந்நிலையில் அன்னாருக்கு வஹி இறங்கியது. கடும் பஷ்டம் ஏற்பட்டது. வஹி இறங்கும்போது அவர்களுக்கு அது ஏற்படும். அவர்களுக்கு எவ்வளவு வியர்வை வரும் என்றால் பனிக் காலத்தில் கூட வியர்வை முத்து போன்று சொட்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வஹியின் நிலை ஏற்பட்டது. அன்னார் புன்முறுவல் செய்தார்கள்.

முதலில் அன்னார் கூறினார்கள்: ஆயிஷாவே! அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து. ஏனெனில் அல்லாஹ் உம்மைக் குற்றமற்றவளாக்கி விட்டான். அப்போது எனது தாயார் என்னிடம், எழுந்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல் என்றார்கள். நான் அல்லாஹ்வின் மீது ஆணையாக. மாட்டேன்; நான் அவர்களிடம் ஒருபோதும் செல்ல மாட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நன்றி செலுத்தவும் மாட்டேன் என்றேன். அல்லாஹ் வழி வழங்கினான். எவர்கள் அவதூறு

கூறினார்களோ அவர்களும் உங்களில் உள்ளவர்கள் தான். மேலும் அல்லாஹ் என்னைக் குற்றமற்றவளாக்கி வழி வழங்கினான். உடனே மிஸ்தாஹ் பின் உஸாஸா ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் நெருங்கிய உறவினராக இருந்ததால் அவருக்கு செலவு செய்து வந்தார். மிஸ்தா ஆயிஷாவின் மீது இட்டுக்கட்டியுள்ளார். எனவே இனி நான் அவருக்கு எந்த செலவும் செய்ய மாட்டேன் என்றார்கள்.

பிறகு சூரா நூரின் வசனம் இறங்கியது. அல்லாஹ் அதில் கூறினான்: அதன் பொருள் இதுவாகும். உங்களில் வசதி படைத்தவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள் ஒருபோதும் ஏழைகள், வறியவர்கள், அல்லாஹ்வின் வழியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்யாதீர்கள். அவர்களை மன்னியுங்கள். கண்டும் காணாமல் விடுங்கள். அல்லாஹ் உங்களை மன்னிப்பதை விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான். (24:23)

ஹஸ்ரத் அபூபக்ர் கூறினார்கள்: ஏன் வேண்டாம்? அல்லாஹ்வின் மீது ஆணையாக. எனக்கு நிச்சயமாக எனது பாவங்களுக்கு அல்லாஹ்வின் திரையிடுதலும் மன்னிப்பும் வேண்டும். அன்னார் மிஸ்தாஹ்விற்கு மீண்டும் உணவளித்தார்கள். மேலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸைனப் பின் ஜெஹ்ஷ் இடம் என்னைப் பற்றி விசாரித்தார்கள். அன்னார் ஸைனபிடம், ஸைனபே! நீர் பார்த்ததிலிருந்து என்ன கருதுகிறீர்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஸைனப், ஆயிஷாவை கற்புள்ள பெண்ணாகவே கண்டேன் என்று கூறினார்கள். எனது காதுகளையும் கண்களையும் பாதுகாக்கப்பட்டதாக கருதுகிறேன். எப்போதும் அவற்றை பாதுகாத்தே வைப்பேன். தவறாக பேச்சுக்களைப் பேச முடியாது. நான் ஆயிஷாவை கற்புள்ளவராகவே கருதுகிறேன். அப்படியே நான் பார்த்தேன்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அதே ஸைனப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மனைவிகளுள் என்னைப் பற்றி குறை கூறுபவராக இருந்தார்கள். அல்லாஹ் அவர்களை அவர்களது தூய்மையின் காரணமாகக் காப்பாற்றினான். அவரது சகோதரி ஹம்னா பின்த் ஜஹ்ஷ் அவரை ஒருதலைப்பட்சமாக நடத்தினார். அவர் அழிந்தார். அதாவது எவர்கள் ஆட்சேபனை செய்தார்களோ அவர்களை அவர்களின் ஒருதலைப்பட்ச எண்ணமும் அவர்களுடன் அழிந்தது.

(சஹீஹ் புகாரி, கிதாபுஷ் ஷஹாதத், பாப் தஃதீலுன் நிஸா... ஹதீஸ் எண் **2661** தொகுதி **4** பக்கம் **721–731**, ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் தனது சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஒரு சம்பவத்தை கூறுகிறார்கள். அதனை புகாரியின் சான்று காட்டி கூறினேன். ஹஸ்ரத் ஆயிஷாவுக்குப் பிறகு அதிகப்படியாக அன்னார் கூறி விஷயம் என்னவென்றால், அந்த சஹாபி اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ ஓதினார்கள். உடனே நான் எழுந்தேன். பார்த்தவுடன் நான் எனது முகத்தை மூடினேன். ஏனெனில் அப்போது பர்தா கட்டளை வந்து விட்டது.

மேலும் இறைவன் மீது ஆணையாக. என்னிடம் அவர் எந்த செயலும் செய்யவில்லை. வேறு எந்த வார்த்தையையும் கூறவும் இல்லை. அவர் வாயில் இருந்து வந்தது எல்லாம் اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ மட்டும்தான். உடனே அவர் தமது ஒட்டகத்திடம் வந்தார். அதனை எனக்கு அருகில் கொண்டு வந்து எனக்கு அருகில் அதனை அமரச் செய்தார். அவர் ஒட்டகத்தில் இரு முட்டியில் தமது கால்களால் அமுக்கிக் கொண்டார். அது திடீரென்று எழுந்து விடாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தார். நான் ஒட்டகத்தின் மீது ஏறினேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **563**)

அங்கே புகாரியில் இவ்வாறு வந்தது. அவரது கைகளில் காலை வைத்து ஏறி அமர்ந்தேன் என்று வந்தது. இங்கு, அவர் ஒட்டகத்தை என் முன் நிறுத்தி தமது கால்களால் அதன் முட்டியைப் பிடித்துக் கொண்டார். திடீரென்று அது எழுந்து விடாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தார் என்று வருகிறது.

இவ்வாறு ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்தவரையில் என்னைப் பற்றி இறைவன் உடைய வஹி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

எவ்வாறிருப்பினும் எனக்கு இது மிகவும் முக்கிய சம்பவமாகும். ஏனெனில் எனக்கு அதற்கான தகுதி இருக்கவில்லை என்று ஹஸ்ரத் ஆயிஷா கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் இது ஒரு முக்கிய சம்பவமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தினர் மீது பெரிய பழி போடப்பட்டது. ஹஸ்ரத் ஆயிஷா அவர்களுக்கு ஒரு சிறப்பான இடம் இருந்தது. அந்த இடத்திற்குக் காரணம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனக்கு வஹி கூட அதிகமாக ஹஸ்ரத் ஆயிஷாவின் அறையில்தான் அதிகம் இறங்கியுள்ளது. சூரா நூரில் அவதூறு பரப்புபவர்களுடன் நம்பிக்கையாளர்களின் எதிர்நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்று விவரிக்கப்பட்டுள்ளது. **10–11** வசனங்கள் முழுமையாக இதுபற்றி கூறுகின்றன.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பற்றி குறிப்பிடும் இடத்தில் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறி விட்ட விஷயங்கள் போக மேற்கொண்டு ஹதீஸில் கூறப்பட்டவற்றை கூறுகிறேன். முதலில் அந்த வசனத்தை கூறுகிறேன். அந்த வசனம் இதுவாகும்:

اِنَّ الَّذِیۡنَ جَآءُوۡا بِالۡاِفۡکِ عُصۡبَۃٌ مِّنۡکُمۡ ؕ لَا تَحۡسَبُوۡہُ شَرًّا لَّکُمۡ ؕ بَلۡ ہُوَ خَیۡرٌ لَّکُمۡ ؕ لِکُلِّ امۡرِیًٔ مِّنۡہُمۡ مَّا اکۡتَسَبَ مِنَ الۡاِثۡمِ ۚ وَ الَّذِیۡ تَوَلّٰی کِبۡرَہٗ مِنۡہُمۡ لَہٗ عَذَابٌ عَظِیۡمٌ (24:12)

அதாவது, நிச்சயமாக பொய்யைப் புனைந்தவர்கள் உங்களில் ஒரு பிரிவினரே. இதனை உங்கள் தீயதாக கருதாதீர்கள். மாறாக உங்களுக்கு சிறந்தது. பாவத்தை சம்பாதித்தவர்களுக்கு அதற்குரிய தண்டனை உண்டு. அந்த பாவத்தின் ஒரு பங்கினை உடையவர்களுக்கு மாபெரும் தண்டனை கிடைக்கும்.

மேலும் அதற்கு அடுத்த வசனத்தைப் படித்தார்கள். அதன் விபரம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த வசனத்தில் எல்லா சம்பவங்களும் விளக்கப்பட்டுள்ளன. பிறகு அன்னார் எழுதியுள்ளார்கள்: மதீனாவுக்கு வந்தடைந்ததும் அப்துல்லாஹ் பின் அபீ ஸலூல் தனது உடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்தான். ஹஸ்ரத் ஆயிஷா (நவூதுபில்லாஹ்) வேண்டுமென்றே பின்தங்கினார். அவரை கூட்டி வந்த சப்வானுடன் செல்வதற்காக அவ்வாறு செய்தார் என்று கூறினான். அந்த கூச்சல் எவ்வளவு பெரியது என்றால் சில சஹாபிகளும் கூட அறியாமையால் அதில் இணைந்தனர்.

அவர்களுள் ஒருவர் ஹஸ்ஸான் பின் ஸாபித்; இரண்டாமவர் மிஸ்தாஹ் பின் உஸாஸா. அதேபோன்று ஒரு சஹாபி பெண் ஜம்னா பின்த் ஜஹ்ஷ். இவர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மைத்துனி ஆவார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தால் கடும் துயரம் ஏற்பட்டது. மேலும் சிறு வயதில் காட்டில் தன்னந்தனியாக ஆயிஷா மாட்டிக் கொண்டார்கள். இதனால் மதீனா வந்து அந்த வேதனையில் நோயுற்றார்கள். இதுவும் ஒரு காட்டில் மாட்டிக் கொண்டதனை நினைத்து ஏற்பட்ட பயம்தான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: நோயிற்கு இதுவும் ஒரு காரணம். ஒரு பக்கம் அவர்களைப் பற்றி நயவஞ்சகர்கள் கதைகட்டி விட்டிருந்தார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரிய வந்தன. அன்னார் ஹஸ்ரத் ஆயிஷாவின் நோயினைக் கூட விசாரிக்க முடியவில்லை. நயவஞ்சகர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கவும் முடியவில்லை. மறுபுறம் பேச்சுக்கள் நாளுக்கு நாள் அதிகமாயின.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அதனைப் பார்த்து நான் வியந்து போனேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களது தலை குனிந்திருந்தது. என்னிடம் எதுவும் பேசவும் இல்லை. மிகவும் கஷ்டத்திற்குள்ளான முகமாக இருந்தது.

என்னைப் பற்றி மற்றவர்களிடம் நலம் விசாரித்து விட்டு சென்று விட்டார்கள். அன்னாரிடம் அனுமதி பெற்று ஒருநாள் நான் எனது பெற்றோர்களிடம் சென்றேன். அங்குதான் இயற்கை தேவைக்காக வெளியே சென்ற சம்பவம் நடந்தது. உறவினர்களுடன் வெளியே சென்றார்கள். அப்போது ஒருவர் தனது மகன் மிஸ்தாஹ்வின் பெயரைக் கூறி அவர் நாசமாகட்டும் என்றார். உடனே ஹஸ்ரத் ஆயிஷா ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர் ஏன் அவ்வாறு கூறக் கூடாது? அவர் என்ன கூறுகிறார் என்று உமக்கு தெரியுமா?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த பெண் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க விரும்பி இருந்தார் என்பது தெரிகிறது. என்ன அவதூறு கூறுகிறார்? என்பதை குறித்து ஆயிஷாவிடம் கூறினார். அவர்களுக்கு இது தெரியாது. ஹஸ்ரத் ஆயிஷா இதனைக் கேட்டதும் கடும் அதிர்க்குள்ளானார்கள். வீட்டிற்கு வந்தார்கள். அந்த நோயின் விளைவு இன்னும் அதிகமானது.

எவ்வாறிருப்பினும் பிறகு அந்த சம்பவத்தைக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்ன செய்யலாம்? என்று ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் ஆகியோரை அழைத்து ஆலாசனை செய்தார்கள். ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் இருவரும் இது நயவஞ்சகர்களின் வதந்தி; உண்மை இல்லை என்றனர். ஹஸ்ரத் அலி அவர்களின் இயல்பில் வேகம் இருந்தது. அன்னார், விஷயம் நடந்ததோ? இல்லையோ? அவதூறு கூறப்பட்ட பெண்ணுடன் தொடர்பு வைக்க வேண்டிய அவசியம் என்ன? என்றார்.

அத்துடன் நீங்கள் பணிப்பெண்ணை விசாரியுங்கள் என்றார். ஏதாவது விஷயம் இருந்தால் பணிப்பெண் கூறி விடுவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷாவின் அடிமைப் பெண்ணான பரிராவிடம், ஆயிஷாவிடம் ஏதும் குறை கண்டாயா? என்று கேட்டார்கள். அப்பெண், ஒரேயொரு குறையைத் தவிர எதனையும் காணவில்லை. வயது குறைவாக இருப்பதால் தூங்கி விடுகிறார். இதே சம்பவத்தை கூறினார். தூக்கம் விரைவாக மிகைத்து விடுகிறது. ஆழமான தூக்கம்.

எவ்வாறிருப்பினும் கூறுகிறார்கள்: பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியில் வந்து ஸஹாபாக்களை அழைத்தார்கள். எனக்கு துக்கம் தந்த அந்த மனிதரிடமிருந்து காப்பாற்றுபவர் உண்டா? என்றார்கள். அன்னார் குறிப்பிட்டது அப்துல்லாஹ் பின் அபி ஸலூல் பற்றியாகும். அவன் அன்னாருக்கு துக்கம் கொடுத்திருந்தான். அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஹஸ்ரத் ஸஅத் பின் மஆஸ் எழுந்து அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் என்றால் அவரை கொல்ல நான் தயாராக உள்ளேன். அவர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றாலும் கொல்வதற்குத் தயார் என்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஷய்த்தான் எப்போதும் குழப்பத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டே இருப்பான். இந்த சந்தர்ப்பத்தையும் விடவில்லை. கஸ்ரஜ் கோத்திரத்திற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்பட்டுள்ளதே? என்ற எண்ணம் வரவில்லை. ஸஅத் பின் மஆஸ் அவ்வாறு கூறியதும் அடுத்த கோத்திரத்திற்கு கோபம் வந்தது. இந்த வகையில் ஸஅத் பின் உபாதா எழுந்து ஸஅத் பின் மஆஸிடம், எங்கள் ஆள்களை நீங்கள் கொலை செய்ய முடியாது. உங்கள் சக்தியால் அப்படி செய்ய முடியாது என்று கூறினார். இந்த பேச்சில் இன்னொரு ஸஹாபியும் எழுந்தார். அவர், நாங்கள் கண்டிப்பாக கொல்வோம். யார் காப்பாற்றுவார்? என்று பார்ப்போம் என்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த விஷயம் பேச்சோடு நிற்கவில்லை. கஸ்ரஜ் கோத்திரத்தினர் வாளை உருவினர். முறைப்படி சண்டையைத் தொடங்கினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் சிரமப்பட்டு இரு பிரிவினரையும் சமாதானம் செய்தார்கள். அவ்ஸ் கோத்திரத்தார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கஷ்டம் கொடுத்தவர்களைக் கொல்வோம் என்றனர். கஸ்ரஜ் கோத்திரத்தார் நீங்கள் மனத்தூய்மையுடன் அவ்வாறு செய்ய மாட்டீர்கள். ஏனெனில் அவர் எங்களைச் சேர்ந்தவர் என்று உங்களுக்கு தெரியும். இதனால் கூறுகிறீர் என்றனர். எவ்வாறிருப்பினும் இதிலிருந்து தெரிவது என்னவென்றால் இரு பிரிவினருக்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு இருந்தது. ஆனால் ஷய்த்தான் இருவருக்கும் இடையில் குழப்பம் ஏற்படுத்த விரும்பினான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அக்காலத்தில் நிலையை ஒவ்வொருவரும் எளிதாகப் புரிய முடியும். இது எத்தகைய ஆபத்தான நிலை. ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பெரும் துன்பம் தரப்பட்டுள்ளது. மறுபுறம் முஸ்லிம்கள் வாள் எடுக்கும் அளவுக்குத் தயாராகி விட்டனர். இவ்வாறு ஷய்த்தான் ஏற்படுத்துகிறான். சில நன்மையான காரியத்திலும் கூட செய்கிறான்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து விளக்குகிறார்கள்: இந்த சம்பவத்தை ஹஸ்ரத் ஆயிஷா கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஆயிஷாவிடம் எல்லா சம்பவங்களையும் பற்றி கேட்கும்போது அன்னார், நான் ஒப்புக் கொண்டாலும் சரி பொய் சொன்னாலும் சரி என்னை குற்றமற்றவளாக நிரூபித்தாலும் சரி நீங்கள் நம்பப் போவதில்லை என்றால் பிறகு ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடைய தந்தை யஃகூப் (அலை) அவர்களது பதிலைக் கூறுகிறேன் என்றார்கள்.

அன்னார் கூறினார்கள்: فَصَبْرٌ جَمِيلٌ وَاللّٰهُ الْمُسْتَعَانُ (12:19) நன்றாக பொறுமை செய்வதே சிறந்தது. இதற்காக அல்லாஹ்விடம் உதவி தான் கேட்க முடியும்; கேட்க வேண்டும். அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா, நான் இதனைக் கூறி விட்டு எழுந்து எனது படுக்கையில் படுத்து விட்டேன் என்று கூறினார்கள். பிறகு இந்த வசனம் இறங்கியது. நான் முதலில் ஓதிய வசனமாகும். அதாவது எவர்கள் கடும் பொய் ஒன்றை கூறினார்களோ அவர்களும் உங்களை சார்ந்தவர்கள் தான். இதனால் உங்களுக்கு இது தீயது என்று கருத வேண்டாம். மாறாக நல்லதாகும்.

ஏனெனில் இந்த பழியினால் பொய்யைப் புனைந்ததன் காரணமாக அதற்கான தண்டனை பற்றி உடனேயே கூறப்பட்டது. இதனால் உங்களுக்கு ஒரு ஞானம் நிறைந்த போதனை கிடைத்து விட்டது. எங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பாவத்திற்குரிய தண்டனையைப் பெறுவர். எவர்கள் இப்பாவத்தின் பெரும் பங்கை எடுத்துள்ளார்களோ அவர்களுக்கு பெரும் தண்டனை கிடைக்கும். ஆகவே எவ்வாறிருப்பினும் இந்த வஹியிற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முகம் மலர்ந்தது. அப்போது எனது தாயார் என்னிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நன்றி கூறு என்று கூறினார்கள். நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன் என்று கூறினேன்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 269–271)

எவ்வாறிருப்பினும் முதலில் கூறப்பட்டது போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் ஒரு குத்பாவில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறியதற்காக மூன்று பேருக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. ஒன்று, ஹஸ்ஸான் பின் ஸாபித். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பெரும் கவிஞர் ஆவார். அடுத்து, மிஸ்தாஹ். இவர் ஹஸ்ரத் அபூபக்ர் உடைய சிற்றன்னை மகன் ஆவார். மிகவும் ஏழையான இவர் அபூபக்ர் (ரலி) அவர்களது வீட்டிலேயே இருந்து உணவு உண்டு வந்தார். அன்னார்தான் அவருக்கு உடைகள் வழங்கினார்கள். பிறகு ஒரு பெண்ணுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 18 பக்கம் 279–280)

சுனன் அபீதாவூதில் இந்த தண்டனை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(சுனன் அபீதாவூது, கிதாபுல் ஹுதூத்... ஹதீஸ் எண் 4474–4475)

எவ்வாறிருப்பினும் சிலரது பார்வையில் தண்டனை கொடுக்கப்பட்டது. சிலரது பார்வையில் தண்டனை கொடுக்கப்படவில்லை.

(தஃப்ஸீருல் குர்தபீ, அத்தியாயம் 15 பக்கம் 169 – 2006–ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆனால் தண்டனை கொடுக்கப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும் அவர்கள் ஸஹாபிகள் ஆவர். அவர்களை அல்லாஹ் மன்னித்து விட்டான். உலகத் தண்டனை கிடைக்க இருந்தது; கிடைத்து விட்டது. மேலும் பிறகு வந்த போர்களில் கலந்து கொண்டனர். இவர்கள் பத்ரில் கலந்து கொண்ட ஸஹாபிகள் ஆவர். அவர்களுள் ஒருவர், மிஸ்தாஹ். இவருக்கு பெரிய அந்தஸ்து உள்ளது. இவர்களின் முடிவை அல்லாஹ் நன்றாக ஆக்கினான். அவர்களின் அந்தஸ்தை நிலைநாட்டினான்; நிலை நிறுத்தினான். அல்லாஹ் அவர்களின் தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

## நபியை நபியாக ஆக்குவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது? நபி அல்லாதவரை நபியாக ஆக்குவது பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான அருளுக்கு ஆதாரமாக இருக்கின்றது

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இறைவனிடம் இருந்து நேரடியாகக் கிடைக்கின்ற நிரந்தரமான நபித்துவத்தின் வாசல் கியாமத் வரை அடைக்கப்பட்டு விட்டது. எதுவரை ஒருவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் என்பதன் உண்மை நிலையை தனக்குள் வைத்திருக்கவில்லையோ, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அடியாராக நான் இருக்கின்றேன் என்று கருதவில்லையோ அதுவரை எவ்வகையிலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தோன்ற முடியாது.

பிறகு இந்த நிலைமையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்திலிருந்து இறக்குவதும், பிறகு அவரைப் பற்றி அவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் ஆவார் என்றும், அவரது நபித்துவம் பெருமானார் (ஸல்) அவர்களது முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பெறப்பட்டதும் அதிலிருந்து அருளைப் பெற்றதுமாகும் என்று கூறுவது எந்த அளவு இட்டுக்கட்டி கூறப்படும் விஷயமாகவும் செயற்கையான விஷயமாகவும் இருக்கின்றது? எவர் முதலிலேயே நபியாக ஆக்கப்பட்டு விட்டாரோ அவர் தொடர்பாக அவரது நபித்துவம் பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் விளக்கிலிருந்து பயனடைந்த நபித்துவமாகும் என்று கூறுவது எவ்வாறு சரியாக இருக்க முடியும்?

அவரது நபித்துவம் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பயனடைந்த நபித்துவமாக இல்லையென்றால் பிறகு அவர் எந்த பொருளில் இந்த உம்மத்தைச் சார்ந்தவர் என்று அழைக்கப்படுவார்? தான் பின்பற்றுகின்ற நபியின் மூலமாக ஒவ்வொரு சிறப்பையும், தான் பெற்றுக் கொள்ளாத வரை உம்மத்தி என்ற சொல் ஒருவருக்குப் பொருந்தாது. பிறகு எந்த நபர் தன்னை நபி என்று கூறுகின்ற இவ்வளவு பெரிய சிறப்பை சுயமே பெற்றிருக்கின்றாரோ அவர் எவ்வாறு இந்த உம்மத்தைச் சார்ந்தவராக இருக்க முடியும்?

மாறாக, அவர்கள் நிரந்தரமான முறையில் நபியாக இருப்பார். அப்படிப்பட்டவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அடியெடுத்து வைப்பதற்கு இடமில்லை. முதலில் இறைவனிடம் இருந்து நேரடியாக வழங்கப்பட்ட அவரது நுபுவ்வத் அவரை விட்டு அகற்றப்பட்டு விடும். இப்போது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக முற்றிலும் புதிய நுபுவ்வத் அவருக்குக் கிடைக்கும் என்று நீங்கள் கூறுவதாக இருந்தால் பிறகு இறை வசனத்தில் குறிப்பிடப்பட்டதற்கேற்ப இந்நிலையில் தலைசிறந்த சமுதாயம் என்று அழைக்கப்படுகின்ற இந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒரு நபருக்குதான் முற்றிலும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் சாத்தியமுள்ள இந்த உயர் தகுதியை அடைவதற்கான தகுதி இருக்கின்றது.

மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்தில் இருந்து இறக்குவதற்கான எந்த தேவையும் இல்லை. ஏனென்றால், இந்த உம்மத்தைச் சார்ந்த ஒருவருக்கு முஹம்மதிய்ய ஒளிகளின் மூலம் நபித்துவத்தின் சிறப்புகள் கிடைக்க முடியுமென்றால் பிறகு இந்நிலையில் ஒருவரை வானத்திலிருந்து இறக்குவது உண்மையிலேயே உரிமையுள்ள ஒருவருக்கு அவருக்குரிய உரிமையை வழங்காமல் அதனை வீணாக்குவதாக ஆகி விடும். இந்த உம்மத்தைச் சார்ந்த ஒருவருக்கு அருளை எட்ட வைப்பதிலிருந்து யார் தடையாக இருக்க முடியும்?

அதன் மூலமாக முஹம்மதிய்ய அருளின் முன்மாதிரியானது எவருக்கும் சந்தேகத்திற்குரியதாக இருக்கக் கூடாது. ஏனென்றால், நபியை நபியாக ஆக்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? உதாரணமாக, ஒரு நபர், தான் தங்கத்தை உருவாக்குவதாக வாதம் செய்கின்றார். அதற்காக தங்கத்தின் மீதே ஒரு எலும்பைப் போட்டு விட்டு, பாருங்கள்! இது தங்கமாக மாறி விட்டது என்று கூறினால் அதனால் அவர் ஒரு இராசயன நிபுணர் என்பதை நிரூபித்து விட முடியுமா?

இந்த உம்மத்தைச் சார்ந்த ஒருவர் மிகவும் உழைத்தவாறு பெருமனார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூல1மாக அந்தத் தகுதி அவரிடம் உருவாகுவதில்தான் பெருமானார் (ஸல்) அவர்களது அருள்களின் சிறப்பு அடங்கி இருக்கின்றது. அது அல்லாமல் முதலிலேயே நபியாக ஆக்கப்பட்ட ஒருவரை இந்த உம்மத்தைச் சார்ந்தவராக ஆக்குவதும், பிறகு அவருக்கு கிடைத்திருக்கும் நபித்துவத்தின் அந்தஸ்தானது சுயமே அவருக்குக் கிடைத்ததல்ல. மாறாக, அவர் இந்த உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பதே இதற்கு காரணமாகும் என்று கற்பனையாகக் கருதுவதும் எந்த அளவு அடிப்படை இல்லாத ஏமாற்று வேலையாக இருக்கின்றது?

(ரிவியூ பர் முபாஹிஸா பட்டாலவி சக்டாலவி. ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 214)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்னான போதனைகள்

நமது வழிமுறை இதுவாகும். அதாவது முழு மனித இனத்துடனும் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும். அண்டை வீட்டுக்காரரான ஒரு இந்துவை ஒருவர் பார்க்கின்றார். அவரது வீடு தீப்பற்றி எரிகின்றது. அதைப் பார்த்துக் கொண்டிருப்பவர் நெருப்பை அணைப்பதற்கு உதவி செய்யாமல் இருந்தால் அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல என நான் உண்மையாகவே கூறிக் கொள்கின்றேன். அவ்வாறே நமது சீடர்களில் ஒருவர் கிறித்தவர் ஒருவர் கொலை செய்யப்படுவதைப் பார்க்கின்றார். அந்த கிறித்தவரை விடுவிப்பதற்கு அவர் உதவி செய்யாமல் இருந்தால் அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல என்பதை முற்றிலும் சரியாகவே நான் கூறிக் கொள்கின்றேன்.

நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். மேலும் நான் உண்மையையே கூறுகின்றேன். அதாவது எனக்கு எந்தவொரு சமுதாயத்திடமும் எந்தவொரு பகைமையும் இல்லை. எனினும், என்னால் இயன்ற வரை அவர்களது கொள்கைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த நான் விரும்புகின்றேன். எவராவது நம்மை ஏசிப் பேசினால் நமது முறையீடு இறைவன் முன்னிலையில் மட்டுமே இருக்கும். வேறு எந்த நீதிமன்றத்திலும் நாம் புகார் கூறப்போவதில்லை. எந்நிலையிலும் மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது எமது உரிமையாகும்.''

(சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 28)

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் அழைத்துக் கொள்வதும் ஓர் அருளாகும்**

**காலத்தின் கலீஃபா எந்த பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளார்களோ அந்த பணியை அல்லாஹ்வின் உதவியினால் முழுமை செய்ய வேண்டும் என்பது மட்டுமே எனது விருப்பமாகும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டிருந்த, ஹதீஸ் புலமையைப் பெற்றிருந்த, கிலாஃபத்தின் மீது அன்பு கொண்டிருந்த, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகன் வழிப்பேரனும், ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி), ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் (ரலி) அவர்களின் மகள் வழிப்பேரனும், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் மாமாவின் மகனும், தமது வாழ்நாளிலேயே இறைவனது கருணையைப் பெற்றதாக செய்தியைப் பெற்றவரும், வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்ற அடிப்படையில் பாதி நூற்றாண்டை விட அதிகமாக தமது வாழ்க்கையின் இறுதி மூச்சு வரை இயக்கத்திற்காக தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்ற, பெரும் முயற்சி செய்யக்கூடிய, ஆலிமான, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த சாஹிப் ஸாதா மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் வகீலுல் இஷாஅத் தஹ்ரீகே ஜதீது அஞ்ஜுமன் அஹ்மதிய்யா ரப்வாவின் மரணமடைந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்கள் அவர்களது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 21 டிசம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று சில சஹாபாக்களைப் பற்றி முதலில் எடுத்துக் கூறலாம் என்றும் அதற்குப் பிறகு கடந்த நாட்களில் வஃபாத்தான மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறலாம் என்றும் நான் எண்ணியிருந்தேன். ஆனால் அவர்களைப் பற்றி மக்கள் அதிகமான கருத்துக்களை எழுதியுள்ளனர். இதன் காரணமாக அவர்களைப் பற்றி இன்று எடுத்துக் கூறலாம் என்று நான் நினைத்தேன்.

மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மூத்த மகனாவார்கள். அவர்களுக்கு கடந்த நாட்களில் ரப்வாவில் தமது 81 வயதில் மரணம் ஏற்பட்டது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகன் வழிப்பேரன்களில் மூத்த பேரன் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா மற்றும் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் ஆகியோரது மகள்வழிப் பேரனும் ஆவார்கள். அன்னார் எனது மாமாவின் மகனாவார்கள்.

அன்னார் ஆரம்பக் கல்வியை காதியானில் பயின்றார்கள். பிறகு ரப்வாவில் முழுமை செய்தார்கள். பிறகு பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் M.A தேர்ச்சி பெற்றார்கள். பிறகு சிறிது காலம் கல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்கள். பிறகு இங்கிலாந்திலுள்ள Oxford University ல் கல்வி பயின்றார்கள். இங்கு இவர்கள் M.A செய்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அன்னார் 1955 ல் வாழ்க்கை வக்ஃப் செய்தார்கள். மேலும் 1962 ல் செயல் களத்தில் காலடி எடுத்து வைத்தார்கள்.

பெரும் முயற்சியுடன் பல்வேறு துறைகளில் அன்னார் தொண்டாற்றியுள்ளார்கள். மிகுந்த ஆர்வத்துடனும், தைரியத்துடனும், முயற்சி செய்தவாறும் பணி செய்யக்கூடிய பழக்கம் உடையவர் ஆவார். ஹதீஸின் ஞானம், தத்துவம் மற்றும் ஆங்கில மொழியின் இலக்கணத்தின் ஞானம் அன்னாருக்கு மிக அதிகமாக இருந்தது. இதனை அதிகமாக அன்னார் படித்துள்ளார்கள். ஹதீஸை படிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. எனவே இந்த ஆர்வத்தின் காரணமாக ஹதீஸின் ஆரம்பக் கல்வியை அன்னார் மர்ஹூம் குர்ஷீத் அஹ்மது சாஹிபிடமிருந்து கற்றார்கள். இவர்களது வீட்டிலும் மிகச்சிறந்த அலுவலகம் இருக்கின்றது. பல அரிய புத்தகங்களை வைத்திருந்தார்கள். படிப்பதற்கு அதிக ஆர்வம் கொண்டவர்களாக விளங்கினார்கள். எந்த துறையைச் சார்ந்த மாணவர்களும் ஏதாவது வழிகாட்டலை வேண்டி அன்னாரிடம் வந்தால் மிகச்சிறந்த அரிய விஷயங்களை வழங்குவார்கள். ஹதீஸின் மிக முக்கிய மற்றும் அடிப்படையான புதிய தொகுப்புகள் அன்னாரிடம் இருந்தது. புத்தகங்கள் கிடைக்ககூடிய பல்வேறு இடங்களிலிருந்து அன்னார் இதனை ஒன்றுதிரட்டியிருந்தார்கள்.

அன்னார் 1955–ஆம் ஆண்டு தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரைப் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: நான் ஜமாஅத்தில் வக்ஃப் செய்வது அதாவது வாழ்க்கையை அர்ப்பணிப்பது தொடர்பான திட்டத்தை ஆரம்பித்துள்ளேன். அதற்குப் பிறகு எனக்கு மூன்று விண்ணப்பங்கள் வந்தன. அதில் ஒன்று எனது பேரனும், மிர்ஸா நாஸிர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனுமான மிர்ஸா அனஸ் அஹ்மது அவர்களுடையதாகும். அல்லாஹ் அவருக்கு தனது எண்ணத்தை முழுமை செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அனஸ் அஹ்மது இவ்வாறு எழுதியுள்ளார்: அதாவது நான் சட்டம் பயின்று எனது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்பது எனது எண்ணமாக இருந்தது. ஆனால் இப்போது நீங்கள் எங்கு வேண்டுமானாலும் என்னை நியமியுங்கள். நான் எதற்கும் ஆயத்தமாக இருக்கின்றேன்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 36 பக்கம் 194 – குத்பா ஜுமுஆ 14 அக்டோபர் 1955)

அல்லாஹ்வின் அருளால் 56 வருடங்கள் வரை ஜமாஅத்தின் பல்வேறு அலுவலகங்களில் அன்னாருக்கு தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. துவக்கத்தில் தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் லெக்சரராக நியமிக்கப்பட்டார்கள். 1975 ஆம் ஆண்டு நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ஆக நியமிக்கப்பட்டார்கள். பிறகு அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாதாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் Private Sec ஆகவும் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் முதலாவதாக ஐரோப்பாவிற்கு சுற்றுப் பயணம் செய்தபோது அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் அட்மினிஸ்டிரேட்டர் ஆகவும் இருப்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. சில ஆண்டுகள் நாஸிர்

தஃலீமாகவும் இருந்துள்ளார்கள். நாயிப் நாஸிர் தீவானாகவும், தஹ்ரீகே ஜதீதில் வகீலுத் தஸ்னீஃபாகவும் இருந்துள்ளார்கள். 1999–ல் வகீலுல் இஷாஅத்தாக நியமிக்கப்பட்டார்கள். 97ல் வயதின் காரணமாக அன்னாருக்கு பணியிலிருந்து ஓய்வு கிடைத்திருந்தபோதிலும் கடைசி மூச்சு வரை அன்னாருக்கு தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. தலைமையக குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ்விலும் தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்துள்ளது.

அன்னார் பராஹீனே அஹ்மதிய்யா மற்றும் மஹ்மூது கி ஆமீன் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். அது அச்சிடப்பட்டு விட்டது. சுர்மா செஷ்மா ஆரியா, இஸாலா அவ்ஹாம் மற்றும் துர்ரே ஸமீன் போன்ற நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை சரிபார்த்து வந்தார்கள்.

நாஸிர் Foundation மூலமாக நமது பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் Chairman ஆகவும் இருந்துள்ளார்கள். மஜ்லிஸே இஃப்தாவின் உறுப்பினராகவும் இருந்தார்கள். Noor Foundation னின் உறுப்பினராகவும் இருந்தார்கள். Noor Foundation நிறுவப்பட்டது. அதற்கான நோக்கம், ஹதீஸ் நூல்களை ஒன்று சேர்த்து ஜமாஅத் சார்பாகவும் அது வெளியிடப்பட வேண்டும். அதற்கு மொழியாக்கம் மற்றும் அதற்கு விரிவுரை எழுதப்பட வேண்டும் என்பதற்காகவும் அது நிறுவப்பட்டது. அன்னார் முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் என்ற நூலை உருது மொழியாக்கம் செய்து வந்தார்கள்.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அது வரலாற்று சம்பவமாகும். அது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் செய்த தியாகம் தொடர்பானதாக இருந்தாலும் இவர்களைப் பற்றியும் அதில் குறிப்பு இருப்பதால் நான் அதனை எடுத்துக் கூறுகின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் காதியானிலிருந்து வந்தபோது நான் எனது வீட்டிலுள்ளவர்களிடம் லங்கரில் இருப்பவர்களுக்கு எவ்வளவு உணவு கிடைக்குமோ அதுவே உங்களுக்கும் கிடைக்கும் என்று கூறினேன். அப்போது நிலைமைகள் மோசமாக இருந்தது. எனவே ஒரு குறிப்பிட்ட அளவே வழங்கப்பட்டு வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: அன்றைய நாட்களில் நான் இந்த வழிகாட்டலை வழங்கி இருந்தேன். அதாவது பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டியே வழங்கப்படும். மேலும் வீட்டிலுள்ளவர்களிடமும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டி வழங்கப்படும் என்றே கூறியிருந்தேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒருநாள் எனது பேரன் அனஸ் அஹ்மது அழுதவாறு என்னிடம் வந்தான். ஒரு ரொட்டியினால் எனது வயிறு நிரம்பாது என்று அனஸ் கூறியதாக என்னிடம் கூறப்பட்டது. அதற்கு ஒரு ரொட்டிதான் நான் வழங்குவேன். மேலும் அவனது வயிறு ஒரு ரொட்டியினால் நிரம்பவில்லை என்றால் நீங்கள் எனக்கு பாதி ரொட்டியை கொடுங்கள். மேலும் எனது பாதி ரொட்டியை அவனுக்கு கொடுங்கள் என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இவ்வாறு நான் பாதி ரொட்டியினால் சமாளித்துக் கொள்வேன். மேலும் இவன் ஒன்றரை ரொட்டியை உண்ணட்டும் என்று கூறினேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: விருந்தினர்களுக்கு ஒரு ரொட்டி என்ற நிபந்தனை நீங்கிய பிறகு நான் வீட்டிலுள்ளவர்களுக்கும் ஒரு ரொட்டி என்ற எண்ணிக்கையை அதிகரிப்பேன். ஆனால் எப்போது வரை விருந்தினர்களுக்கு ஒரு ரொட்டிதான் என்ற நிபந்தனை நீக்கப்படவில்லையோ அவனுக்கு எனது ரொட்டியின் பாதி அளவை அவனுக்கு கொடுக்கவும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பிறகு நிலைமைகளில் அல்லாஹ் அருள் செய்தான். பிறகு சிந்து நிலப்பகுதிலுள்ள விளைச்சல் மட்டும் சரியாகவில்லை. மாறாக, இறைவன் வருமானத்திற்கான வழிகளையும் திறந்தான். பிறகு இந்த கட்டுப்பாடு விலகி விட்டது.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 37 பக்கம் 53 – குத்பா ஜுமுஆ 03 பிப்ரவரி 1956)

அன்னாரது மருமகன் மிர்ஸா வஹீது அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்:

ஒரு முறை நான் பஹாரா மற்றும் சமர்கந்திற்கு பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் என்னிடம், நீங்கள் அங்கு செல்றால் இமாம் புகாரியின் கபருக்குச் சென்று என் சார்பாகவும் துஆ செய்யுங்கள். மேலும் எனது சலாத்தை கூறுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக அந்த மனிதர் ஆயிரக்கனக்கான வருடங்களுக்கு முன்னுள்ள நபி (ஸல்) அவர்களது கூற்றுக்கள் மற்றும் சம்பவங்களின் கருவூலங்களை ஒன்று சேர்த்து நம் வரை எட்ட வைத்துள்ளார்கள். எனவே நாம் அவர்களுக்காக துஆ செய்வதும், அவருக்கு சலாத்தை எட்ட வைப்பதும் நமது கடமையாகும் என்று கூறினார்கள்.

டாக்டர் நூரி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

எனக்கு அவர்களுடனான அனுபவமானது பல ஆண்டுகளாக அவர்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவர்களிடம் எந்த பணியை கொடுத்தாலும் அதை ஓர் ஆர்வத்துடன் செய்து முடிப்பார்கள். உளப்பூர்வமாகவும், பெரும் முயற்சி செய்தவாறும் தமது பணியை அவர்கள் செய்வார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பலவீனம் மற்றும் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை மொழியாக்கம் செய்து வந்ததை நான் பார்த்துள்ளேன். மணிக்கணக்காக Computer ல் Type செய்வார்கள். அன்னாருடன் இருப்பவர்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களின் ஆதாரங்களை எடுத்துக் கொண்டு அன்னாருக்கு அருகில் நிற்பார்கள். அன்னார் எப்போதும் இதை கூறி வந்தார்கள். அதாவது எனது விருப்பம் இது மட்டுமே ஆகும். அது என்னவென்றால், காலத்தின் கலீஃபா எந்த பணியை என்னிடம் ஒப்படைத்துள்ளார்களோ அதை நான் அல்லாஹ்வின் உதவியுடன் முழுமை செய்வேன்.

நூரி சாஹிப் எழுதுகின்றார்கள்: அவர்களது ஞாபக சக்தியும் போற்றக்கூடியதாகும். நபிமொழிகள் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பை வைத்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கலீஃபாக்களின் சம்பவங்களை எந்த அளவுக்கு உணர்வுப் பூர்வமாகவும், ஆர்வமாகவும், ஞானமிக்க முறையிலும் எடுத்துக் கூறுவார்கள் என்றால் கேட்பவர்களது உள்ளங்களை கவர்ந்து விடுவார்கள். மேலும் சம்பவங்களை எடுத்துக்கூறும் போது அன்னாரது கண்களிலிருந்து கண்ணீர் வந்து விடும்.

நூரி சாஹிப் எழுதுகின்றார்கள்: பொறுமையும் அவர்களிடம் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு கஷ்டமான நிலைமைகளிலும் அன்னார் எப்போதும் பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். மிகுந்த தைரியத்துடன் ஒவ்வொரு கஷ்டத்தையும் சகித்துக் கொண்டார்கள். அன்னாரது நோயின் காரணமாக ஒரு கிலாஸை அதாவது தேநீர் குடிக்கக்கூடிய குவளையை கூட தூக்க முடியாதவராக இருந்தார்கள்.

அவ்வாறே படுக்கையில் இங்கும் அங்கும் திரும்பிப் படுக்க இயலாதவர்களாக இருந்தபோதிலும், எப்போதும் தனது பணியை செய்து வந்தார்கள். மேலும் பெரும் முயற்சியுடன் தமது பொறுப்புகளை நிறைவேற்றி வந்தார்கள். ஒருபோதும் குற்றச்சாட்டிற்கான எந்த சந்தர்ப்பத்தையும் வழங்கியதில்லை. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொண்டிருந்தார்கள்.

நூரி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: வரக்கூடிய ஒவ்வொருவரிடமும் மகிழ்ச்சியுடனும், புன்முறுவல் செய்தவாறும் சந்திப்பார்கள். இது அன்னாரது மிகப்பெரிய நற்பண்பாக இருந்தது. தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட் செல்வதற்கு ஒரு நாள் முன்பு அன்னார் என்னை சந்திப்பதற்காக வந்தார்கள். நோயின் தாக்கத்தை அன்னாரது முகத்தில் உணர முடிந்தது. அவ்வாறிருந்தும் அன்னார் சிரித்தவாறு, எனது முடிவு நெருங்கி விட்டது. மேலும் நான் எனது இறைவனை சந்திக்கச் செல்கின்றேன் என்று கூறினார்கள்.

இவ்விஷயத்தை அன்னார் மிகவும் சிரித்த முகத்துடன் கூறினார்கள்.

நன்றி தெரிவிப்பது தொடர்பாக நூரி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னாரிடம் பரிவுடன் நடந்து கொள்வது மற்றும் நன்றி தெரிவிப்பது ஆகிய நற்குணங்கள் அதிகமாக இருந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு சந்தர்ப்பங்களில் அன்னார் மிகுந்த பரிவுடன் நடந்து கொண்டவாறு தனது உணர்வை வெளிப்படுத்தியவாறு என்னிடம், நீங்கள் எத்தகைய கலப்பற்ற முறையில் என்மீது பரிவு காட்டினீர்களோ மேலும் என்னை கவனித்துக் கொண்டீர்களோ அதற்கான தொகையை என்னால் ஒருபோதும் செலுத்த முடியாது என்று கூறினார்கள்.

நூரி சாஹிப் கூறுகின்றார்கள்: அன்னார் எனக்கு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது கனவுகள் எழுதப்பட்டிருந்த டைரியை எனக்கு வழங்கினார்கள். அவ்வாறே ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது ஒரு கோட்டையும் எனக்கு வழங்கினார்கள். அவ்வாறே மருத்துவ குழுவோடும் அன்னார் மிகுந்த பரிவுடன் நடந்து கொண்டார்கள்.

அன்னாரது அறையின் நூலகத்தை நானும் பார்த்துள்ளேன். நூரி சாஹிபும் எழுதியுள்ளார்கள். அதாவது அவர்களது நான்கு சுவர்களிலுள்ள செல்ஃபிலும் எதுவரை என்றால் அறை முழுவதும் மேற்கூரை வரை நூல்களால் நிரம்பி இருந்தன. அவற்றில் பல்வேறு வகையான விஞ்ஞானம், பொருளாதாரம் மற்றும் பல தலைப்புகளைக் கொண்ட நூல்கள் இருந்தன. மேலும் இந்த அனைத்து நூல்களையும் நான் படித்துள்ளேன் என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

மீர் தாவூது அஹ்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகள் நுத்ரத் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னாரது மரணத்தைக் கேள்விப்பட்டு பல நினைவுகள் எனது உள்ளத்திலும் சிந்தனையிலும் தோன்றியது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடனான நினைவுகள் மீண்டும் வந்தது.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது மகளின் திருமணம் நடைபெற இருந்தது. எனவே ஏற்பாடுகளை பார்ப்பதற்காக நான் மார்கிக்கு சென்றேன். அங்கு எனது சகோதரர் அனஸ் முன்பாகவே வந்து அமர்ந்துள்ளார். மேலும் அவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். இங்கு ஏன் இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டார்கள் என்று நான் ஆச்சரியப்பட்டேன். என்னைப் பார்த்து, இன்று எனக்கு உனது தந்தை மர்ஹூம் மீர் தாவூது அஹ்மது சாஹிப் அவர்களின் நினைவு அதிகமாக வந்தது. எனவே நான் இங்கு வந்து உனக்காக துஆ செய்து கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்.

அவர்களது மருமகன் ஆமிர் அஹ்மது எழுதுகின்றார்கள்: மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் அன்பு செலுத்தக்கூடிய ஒரு தந்தையைப் போன்று எங்களிடத்தில் இருந்தார்கள். எல்லா வீடுகளிலும் கொஞ்சம் சண்டைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவர்கள் எதுவுமே நடக்காதது போல் மன்னித்து விடுவார்கள். மாறாக, தனது அறிவுரையின் காரணமாக மற்றவருக்கு துன்பம் ஏற்பட்டிருந்தால் அவர்கள் செய்த அந்த நல்ல அறிவுரைகளுக்குப் பிறகும் அன்னார் அவர்களிடம் மன்னிப்பு கேட்பார்கள். அடுத்த நாளே மன்னிப்பு கோருவார்கள்.

முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அடிஷனல் வகீலுத் தஸ்னீஃப் அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களோடு எனது பல சந்திப்புகள் நடைபெற்றுள்ளது. எப்போதும் அவர்களை பரிவு காட்டக்கூடியவராகவே கண்டுள்ளேன். வயதைப் பொறுத்தவரை என்னை விட பெரியவராவார்கள். ஒருபோதும் அன்னார் தமது வயது அல்லது அறிவின் மூலமாக தாம் பெரியவர் என்பதை வெளிப்படுத்தியது கிடையாது.

முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மியான் சாஹிபுடன் தஸ்னீஃபில் பணி செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டதிலிருந்து அன்னாரை எப்போதும் அதிகமாக வழிகாட்டக்கூடிய உதவியாளராகவும், ஒத்துழைப்பு வழங்கக் கூடியவராகவுமே கண்டேன். எப்போது அவர்களுக்கு எந்த பணியை கொடுத்தாலும் அதை அவர்கள் பெரும் முயற்சி செய்தவாறு நிறைவேற்றினார்கள். மாறாக, எப்போதும் இதை கூறி வந்தார்கள். அதாவது மேலும் அதிகமான பணியை தாருங்கள். நோயில் எந்த அளவு அதிகமாக பணி செய்ய முடியுமோ அது சிறந்தாகும்.

கிலாஃபத்தோடு எல்லையற்ற கலப்பற்ற மற்றும் அன்பின் தொடர்பை கொண்டிருந்தார்கள். பணிகள் தொடர்பாக எப்போது பேசினாலும், எனது சலாத்தை கூறுங்கள் என்று கூறி வந்தார்கள். அதாவது எனக்கு சலாத்தை எட்ட வைத்து வந்தார்கள். மேலும் எனது பணியின் காரணமாக என்மீது கோபம் ஏதும் இல்லையே என்று எப்போதும் கேட்டு வந்தார்கள். காலத்தின் கலீஃபா ஒருபோதும் கோபமடைந்து விடக்கூடாது என்ற கவலை எப்பொழுதும் அவர்களிடம் இருந்தது.

முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நோயுற்றிருந்த போதிலும் என் சார்பாக அவர்களுக்கு ஏதேனும் பணி கொடுக்கப்பட்டால் அதை மிகுந்த மகிழ்ச்சியுடன் விரைவாக முடிப்பதற்கு முயற்சி செய்வார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில புத்தகங்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்வது தொடர்பாக அன்னார் போற்றத்தக்க பணியை செய்வதற்கான நற்பேற்றை பெற்றார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவின் சில பகுதிகளை அன்னார் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பை செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது அணி அவர்களது கருத்துக்களை எப்போதும் முக்கியத்துவம் கொடுத்து வந்தது. என் சார்பாக வகாலத் தஸ்னீப் அவர்களிடம், காலத்தின் கலீஃபா கூறினார்கள். இது தொடர்பாக உங்களது கருத்துக்களை வழங்குங்கள் என்று ஏதேனும் வழிகாட்டல் வழங்கப்பட்டால் சிறப்பான கருத்துக்களை அனுப்புவார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் ஒரு மார்க்க அறிவு படைத்த நபராவார்கள். அவர்கள் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்கள். அந்த அறிவிலிருந்து ஜமாஅத் தற்போது அவர்களின் இழப்பை உணர்கிறது. அல்லாஹ் மேலும் அதிகமான மார்க்க அறிவு படைத்தவர்களை உருவாக்குவானாக.

அன்னாரது ஒரு சிறப்புத்தன்மை தொடர்பாக பலரும் எழுதியுள்ளனர். பல முபல்லிக்களும் எழுதியுள்ளனர். முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்களும் எழுதியுள்ளார்கள். அதாவது அவர்கள் முபல்லிக்களுக்கு அதிக கண்ணியம் அளிப்பார்கள். இது அன்னாரது மிகப்பெரிய சிறப்புத்தன்மை ஆகும். மேலும் அறிவு ரீதியாக வழிகாட்டலும் அன்னார் வழங்கி வந்தார்கள்.

ஹாபிழ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் கூறுகின்றார்கள்: மியான் சாஹிப் அவர்கள் எல்லா சிறப்பம்சங்களுக்கும் சொந்தக்காரர் ஆவார். இறைவன் மீதான அன்பு, திருக்குர்ஆன் மீதான அன்பு, ரஸூலின் மீதான அன்பு, எளிமை, பணிவு, விருந்தோம்பம், கருணை, பரிவு போன்றவை அன்னாரது நற்பண்புகளாகும். இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மட்டுமின்றி அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் அன்னார் கருத்தில் கொள்வார்கள். ஏழைகள் மற்றும் ஆதரவற்றோர்கள் மீது அதிக பரிவு காட்டக்கூடியவராவார்கள். தேவையுடைய எவரையும் வெறுங் கையுடன் திருப்பி அனுப்ப மாட்டார்கள். கடன் வாங்கியாவது அவர்களுக்கு உதவி செய்ய நேரிட்டாலும் அவ்வாறு செய்வார்கள்.

ஹாபிழ் சாஹிப் எழுதுகின்றார்கள்: அறிவு படைத்த மனிதர் ஆவார். அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பான ஆர்வம் இருந்தது. இதற்காக அன்னார் அதிகமான முயற்சிகளை செய்தார்கள்.

ஹாபிழ் சாஹிப் எழுதுகின்றார்கள்: அன்னாரே என்னிடம் இதைக் கூறியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை அன்னார் 10 ஆம் வகுப்பு தேர்விற்குப் பிறகு வருகின்ற விடுமுறை நாட்களில் முதல் முறையாக முழுவதுமாக படித்தார்கள். இந்த விஷயத்தை அன்னார் என்னிடமும் கூறியுள்ளார்கள். மாறாக, ஒரு முறை ஒரு கடிதத்தில் இவ்வாறும் எழுதி கொடுத்தார்கள். அதாவது நான் முதல் முறையாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை 15,16 வயதில் முழுமை செய்து விட்டேன். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பு கொண்டவர்கள் ஆவார்கள்.

ஹாபிழ் சாஹிப் எழுதுகின்றார்கள்: இதன் காரணமாக ஹதீஸ் ஞானத்தைப் பெறுவதில் அன்னாருக்கு குறிப்பான ஆர்வம் இருந்தது. மாறாத அன்பு இருந்தது. இதற்காக அன்னார் தனிப்பட்ட அன்பு மற்றும் படித்ததன் காரணமாக அரபு மொழியில் எந்த அளவுக்கு தகுதியையும், அதன் புலனையும் பெற்றார்கள் என்றால் ஹதீஸ்கள் மட்டுமின்றி அதன் விளக்கங்களையும் படித்து வந்தார்கள்.

மெட்ரிக்கிற்குப் பிறகு சஹீஹ் புகாரியை அன்னார் ஹக்கீம் குர்ஷீத் சாஹிபிடம் கற்றார்கள்.

இதற்கும் பிறகும் நான் அன்னாரைக் கண்டுள்ளேன். காலேஜில் அன்னார் லெக்சரராக இருந்தபோதும் காலேஜிற்கு செல்வற்கு முன்பாக ஹகீம் சாஹிபின் வீட்டிற்கு முன்னால் அன்னாரது கார் நிற்கும். ஹகீம் சாஹிபிடம் ஹதீஸை படித்த பிறகு தமது பணிக்கு அன்னார் சென்று வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு சிஹா சித்தா என்று அழைக்கப்படுகின்ற இதர ஹதீஸ் நூல்கள்களை தனது தனிப்பட்ட ஆர்வத்தின் காரணமாக அன்னார் படித்தார்கள். தமது இறுதி மூச்சு வரை ஒரு மாணவராகவே அன்னார் இருந்தார்கள்.

ஹதீஸ் நூல்களின் ஒரு மிகச்சிறந்த விலைமதிப்புமிக்க கருவூலத்தை அன்னார் தனது நூலகத்தில் ஒன்று சேர்த்துள்ளார்கள். அதில் பயனளிக்கக்கூடிய கிடைப்பதற்கரிய புத்தங்கள் இருக்கின்றன. இந்த அடிப்படையின் அன்னாரது இந்த சொந்த நூலகம் தன்னகத்தே ஒரு ஆதாரமாக இருக்கின்றது. அன்னாருக்கு ஹதீஸின் மீது எந்த அளவுக்கு ஈர்ப்பு இருந்தது என்றால் ஹதீஸின் அடிப்படையான விதிகள் போன்ற பல நூல்களை அன்னார் தன்னிடத்தில் ஒன்று சேர்த்து வைத்துள்ளார்கள். ஆழமாக படித்து வந்தார்கள். மேலும் படித்ததைப் பற்றி விவாதித்தும் வந்தார்கள்.

சிஹா சித்தா என்ற ஹதீஸ் நூல்களை மொழியாக்கம் செய்வது தொடர்பாக நான் இங்கிருந்து நூர் ஃபவுண்டேஷன் என்ற கமிட்டியை ஏற்படுத்தியிருந்தேன். அதன் பணி என்னவென்றால், நான் கூறியது போன்று உருது மொழியில் மொழியாக்கம் செய்ய வேண்டும். மேலும் சிலவற்றிற்கு விளக்கம் எழுத வேண்டும்.

ஹாபிழ் சாஹிப் எழுதுகின்றார்கள்: மியான் சாஹிபும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்கள். மியான் சாஹிப் தமது அலுவலக பணிகள் மட்டுமின்றி சுயமே தனிப்பட்ட முறையில் முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் என்ற நூலை உருது மொழியில் மொழியாக்கம் செய்வதை தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டார்கள். இது மிகக்கடினமான மற்றும் நீண்ட பணியாகும். பிறகு இதர பணிகள் மற்றும் உடல்நலம் சரியில்லாமல் இருப்பது ஆகியயை இருந்தபோதிலும் அன்னார் இந்த பணிகளை தொடர்ச்சியாக செய்து வந்தார்கள். பிறகு பல ஹதீஸ்களை கொண்ட ஒரு பகுதியை அன்னார் முழுமை செய்தார்கள். அன்னாரது இந்த தொண்டு நினைவு கூறத்தக்கதாக இருக்கும்.

ஹாபிழ் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஹதீஸின் மீது அன்னார் கொண்டிருந்த அன்பின் அழகான வெளிப்பாடு ரமலான் மாதத்தில் அன்னார் வழங்குகின்ற ஹதீஸ் தர்ஸிலிருந்து தெரிய வரும். பேணுதலோடும், முயற்சி செய்தவாறும் அன்னார் இந்த தர்ஸை வழங்கி வந்தார்கள். இந்த தர்ஸ் பொதுவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும் விலைமதிப்புமிக்க ஆதாரங்களை அன்னார் ஒன்று சேர்த்து எடுத்துக் கூறுவார்கள். அன்னாரது குரலிலும் ஒரு குறிப்பான உருக்கம் இருந்தது. அன்னாரது தர்ஸை ரமலானில் நாங்கள் குறிப்பாக கேட்போம். மிகச்சிறப்பான முறையில் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். ஒரு குறிப்பான உணர்வு ரீதியிலான அன்பு மற்றும் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அன்னார் தர்ஸ் கொடுத்து வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் மனிதன் சில நொடிகளில் ஆரம்ப காலகட்டத்திற்கே சென்று விட்டதைப்போன்று அது இருக்கும். ரப்வா ஆண்டு மாநாட்டில் அன்னாருக்கு பல ஆண்டுகளாக சொற்பொழிவு நிகழ்த்தும் நற்பாக்கியம் கிடைத்தது.

ஷமீம் பர்வேஸ் சாஹிப் நாஹிப் வகீல் வக்ஃபே நவ் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னாருக்கு கிலாஃபத்தோடு இருந்த உளப்பூர்வமான அன்பின் ஒரு சம்பவம் என் உள்ளத்தில் பதிந்துள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான்காவது கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்ட போது நான் ஜன்ங் மாவட்டத்தின் காயிதாக இருந்தேன். முபாரக் பள்ளிவாசலின் வாசலுக்கு வெளியே எனது டியூட்டி இருந்தது. உள்ளிருந்து ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹ்) அவர்கள் நான்காவது கலீஃபத்துல் மஸீஹாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவல் கிடைத்தது.

ஷமீம் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் அவர்களை நான் பார்த்தேன். ஜூன் மாதத்தின் கடுமையான வெயில் இருந்த போதும் கடுமையான வெப்பம் பட்டுக் கொண்டிருக்கும் தரையில் அன்னார் இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு விழுந்து விட்டார்கள்.

டாக்டர் இஃப்திஹார் சாஹிப் லண்டன் எழுதுகின்றார்கள்: அன்னார் உண்மையான முறையில் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் ஆவார்கள். அலுவலகத்திற்கு வருவதை ஒருபோதும் அன்னார் விட்டு விடவில்லை. வெளியீட்டு மற்றும் மொழியாக்கம் தொடர்பான பணிகளில் கடைசி மூச்சு வரை ஈடுபட்டிருந்தார்கள். அதில் மொழியாக்கம் செய்யும்போது அதில் ஆழ்ந்து கவனத்துடன் பொழிபெயர்ப்பார்கள். சரியான மரபுச் சொற்றொடர்களை தேடுவதில் பல நாட்கள் கூட செலவழிப்பார்கள். மேலும் கட்டுப்படுதலின் தரமும் மிக உயர்வானதாக இருந்தது.

காலித் சாஹிப் ரஷ்யன் டெஸ்க் லண்டன் அவர்கள் எழுதுகின்றாகள்: மியான் சாஹிபைப் பற்றி எப்போது எனது நினைவுக்கு வந்தாலும் எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருளுக்குரிய ஹதீஸான சிறு வயதிலிருந்து முதுமை வரை அறிவைத் தேடுங்கள் என்பதன் உண்மையான செயல் வடிவமாக அன்னார் திகழ்ந்தார்கள் என்ற விஷயம் நினைவுக்கு வரும். மியான் சாஹிப் அவர்களுக்கு பல்வேறு வகையான ஞானங்களைக் கற்க அதிகமான ஆர்வம் இருந்தது.

எந்தவொரு புதிய விஷயத்தைப் பற்றி தெரிந்து கொண்டாலோ மற்றும் எதையாவது பற்றி புதிதாக தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அன்னார் ஒருபோதும் வீணாக்கியதில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபிமொழிகள் மற்றும் ஹதீஸின் ஞானங்கள் போன்றவை அன்னாருக்கு பிடித்த தலைப்புகளாகும். பல்வேறு மொழிகளைக் கற்பதை அன்னார் விரும்பி வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: விருந்தோம்பல் அன்னாரிடம் காணப்பட்ட ஒரு குறிப்பான சிறப்பம்சமாகும். 2005–ஆம் ஆண்டு நடைபெற்ற விஷயமாகும். ரஷ்யாவின் சதர் ஜமாஅத் ருஸ்தம் ஹமாது வலி சாஹிப் அவர்கள் இவர் முஅல்லிமும் ஆவார்கள். ரஷ்யன் மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் தொடர்பாக ரப்வா வந்திருந்தார்கள்.

காலித் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களோடு இணைந்து பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. பணிகளை முழுமை செய்து கொண்டிருந்தேன். ருஸ்தம் சாஹிபின் தங்குமிடம் இந்த நாட்களில் தஹ்ரீகே ஜதீது கெஸ்ட் ஹவுஸில் இருந்தது.

ஒரு முறை சாப்பிடும்போது சில பொருட்கள் இல்லாமல் இருந்தது. ருஸ்தம் சாஹிபின் இயல்புக்கு ஏற்ற பொருட்கள் இல்லாமல் இருந்து. காலியாகி விட்டது. இது பற்றி மியான் அனஸ் அவர்களுக்கு தெரிய வந்தது. உடனே அவர்கள் என்னை அழைத்து, ருஸ்தம் சாஹிப் நமது அன்பிற்குரிய விருந்தாளி ஆவார்கள். அவர்களது தேவைகளுக்கான எல்லா பொருட்களையும் கருத்தில் கொள்வது நமது முதன்மையான கடமையாகும் என்று கூறினார்கள்.

பிறகு தனது ஜேபிலிருந்து பணத்தை எடுத்து அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுங்கள். மேலும் இனிவரும் நாட்களிலும் ஏதும் தேவை இருப்பின் அது பற்றி எனக்கு கூறுங்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்களிடத்தில் ஏற்பாடு ஆகிவிட்டது. மேலும் எல்லா பொருட்களும் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டன என்று கூறினேன். இதற்குப் பிறகும் அன்னார் தொடர்ச்சியாக இது தொடர்பாக கேட்டு கொண்டிருந்தார்கள்.

பர்மாவின் முபல்லிக் முஹம்மது சாலிக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸ்ரீலங்காவின் மாணவனின் ஒரு சம்பவம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. முனீர் அஹ்மது என்ற மாணவர் ஸ்ரீலங்கா விலிருந்து ஜாமிஆவில் படிப்பதற்காக வந்திருந்தார். அவர் இப்போது ஸ்ரீலங்காவில் முபல்லிக்காக பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். ஜாமிஆவில் படித்துக் கொண்டிருக்கும்போது ஒருமுறை அவர்கள் கடுமையாக நோயுற்றார்கள். மியான் சாஹிபிற்கு மிகுந்த கவலை ஏற்பட்டது. இரவும் பகலும் ஹாஸ்டலுக்கு வருகை தந்து, தமது அன்பிற்குரிய ஒருவர் நோய்வாய்ப்பட்டிருப்பதைப் போன்று அவர்களது நிலைமைகளை கேட்டு வந்தார்கள்.

அன்றைய நாட்களில் மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் அட்மினிஸ்ட்டேட்டர் ஆக இருந்தார்கள்.

அமெரிக்காவின் முபல்லிக் ஷம்ஷாது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: முரப்பிகளுடனான மீட்டிங்கில் அவர்களிடம் தப்லீக்கின் உணர்வை ஏற்படுத்துவதற்கு அன்னார் பெரும் முயற்சி செய்து வந்தார்கள். படிப்பதன் பக்கம் அதிக ஆர்வம் இருந்தது. முரப்பிகளிடமும் படிப்பதன் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டி வந்தார்கள். மேலும் தாமும் அலுவலகத்தை நூல்களினால் நிரப்பி வைத்திருப்பார்கள். புகாரியை அதிகமாக படித்து வந்தார்கள். வருகின்ற, செல்கின்ற மாணவர்களிடமும் அறிவு சார்ந்த விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவார்கள்.

கானாவின் முபல்லிக் ஷாஹிது மஹ்மூது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

எனக்கு மியான் சாஹிபோடு 12 வருடங்களுக்கும் அதிகமாக வகாலத் இஷாஅத்தில் தஹ்ரீகே ஜதீதின் ஆங்கில நாளிதழின் ஆசிரியராக பணியாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. மியான் சாஹிபிடமிருந்து எண்ணற்ற விஷயங்களை கற்பதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அன்பு, மேலும் கிலாஃபத்துடன் அன்பு மற்றும் கட்டுப்படுதல் ஆகியவை அன்னாரிடம் நிறைந்து காணப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரைக் கேட்டதுமே அன்னாரது கண்களில் கண்ணீர் வழிந்தோடும்.

புத்தகங்களை மொழியாக்கம் செய்வது, குறிப்பாக பராஹீனே அஹ்மதிய்யா, சுர்மா செஷ்மா ஆரியா, மஹ்மூது கி ஆமின் போன்ற நூல்களை மொழியாக்கம் செய்த நேரத்தில் என்னை அவர்களுடன் தனது அலுவலகத்தில் உட்கார வைப்பார்கள். மேலும் பல முறை மொழியாக்கப் பணிக்காக தனது வீட்டிற்கு அழைப்பார்கள். விடுமுறை நாள் என்றோ, அலுவலகம் மூடி இருக்கின்றது என்ற கவலையோ அன்னாருக்கு இருந்தது கிடையாது. பெரும்பான்மையான நேரங்கள் மாலை நீண்ட நேரம் வரை பணியை தொடர்ந்து செய்து வருவார்கள். இருந்த போதிலும் எனக்கு விருந்தோம்பல் செய்வது மற்றும் என்னுடன் பரிவுடன் நடந்து கொள்வது போன்றவற்றையும் அன்னார் செய்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: லுஹர் தொழுகைக்கு இமாமத் செய்ய என்னை நியமித்திருந்தார்கள். எனது அலுவலகத்திலேயே அனைத்து பணியாளர்களும் தொழுவார்கள். சுன்னத்தான தொழுகையை அவர்கள் தொழுவதை நான் பார்த்துள்ளேன். அவர்களது தொழுகை மிகவும் உருக்கமாக தொழுவார்கள். அலுவலகத்தில் இருக்கின்ற பணியாளர்களிடம் பரிவுடன் நடந்து கொள்வார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் நான் நோயுற்றிருந்த போதும் அலுவலகத்திற்கு வந்தேன். எனக்கு ஆறு நாட்களுக்கு விடுப்பு வழங்கி வலுக்கட்டாயமாக என்னை ஓய்வு எடுக்கும்படி வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். மேலும் அவர்கள் நோயிற்றிருந்தபோதிலும் வருகை தருவார்கள். மேலும் வீட்டிலும் பணியை தொடர்ந்து செய்து வந்தார்கள்.

யூ.கேவின் அயாஸ் மஹ்மூது சாஹிப் முரப்பி வகாலத் தஸ்னீஃப் கூறுகின்றார்கள்: பணிகள் தொடர்பான நான் அவர்களிடமிருந்து பல விஷயங்களை கற்றுள்ளேன். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களின் மொழியாக்கத்தை மிகுந்த ஆர்வத்துடன் செய்து வந்தார்கள். எனவே மொழியாக்கத்தின்போது வரக்கூடிய கஷ்டமான இடங்கள் மற்றும் அதற்கான தீர்வு பற்றியும் எடுத்துக் கூறுவார்கள். மேலும் தனது அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வார்கள்.

ஒரு விஷயத்தை அன்னார் குறிப்பாக கூறி வந்தார்கள். அது என்னவென்றால், மொழியாக்கம் செய்யும்போது சொற்பொருளின் மொழியாக்கத்தை மட்டும் அகராதியில் பார்த்து அதை பயன்படுத்துவது போதுமானது கிடையாது. மாறாக, அந்த சொல் ஏதாவதொரு வகையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் இருக்கவில்லையே? என்பதையும் பார்ப்பது அவசியமாகும். மேலும் ஏதாவதொரு சொற்பொருளின் மொழியாக்கம் சரியில்லை என்றால் சரியான கருத்துகளை எடுத்துரைக்கும் ஏதாவதொரு சொல்லை பயன்படுத்த வேண்டும். மேலும் அன்னாருக்கு மொழியாக்கப் பணியில் எந்த அளவுக்கு அன்பு இருந்தது என்றால் நோயுற்றிருந்த போதும் அன்னார் இந்த பணியை செய்யாமல் இருக்கவில்லை.

நோயுற்றிருந்தபோது அன்னார் பல முறை எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதாவது நோயின் காரணமாக எனது பணியின் வேகம் குறைந்து விட்டது. நான் அமரும் போது எந்த அளவுக்கு நான் விரும்புகின்றேனோ அந்த அளவுக்கு என்னால் உட்கார முடியவில்லை. சோர்வடைந்து விடுகின்றேன். ஆனால் இருந்தபோதிலும் 6,7 மணி நேரம் உட்கார்ந்து விடுகின்றேன். தொடர்ச்சியாக பணி செய்கின்றேன்.

அன்னார் 12,13 மணி நேரங்கள் பணி செய்வதை நான் பார்த்துள்ளேன். மேலும் 15 மணி நேரங்கள் பணி செய்வதை நான் பார்த்துள்ளேன்.

அயாஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: நாங்கள் ரப்வா சென்றோம். அப்போது மியான் சாஹிப் அவர்கள் எங்களுக்கு சில வகுப்புகளை நடத்தினார்கள். அந்த நேரத்திலும், பிறகு இப்போது அவர்களை சந்தித்தாலும் அவர்களிடம் பேசினால் இந்த விஷயத்தை கூறுவார்கள். அதாவது நீங்கள் பிரசுரங்களையும் படியுங்கள். மேலும் எல்லா விதமான புத்தங்களைப் படிப்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மார்க்க நூல்களை மட்டும் படிப்பவராக இல்லாமல், தத்துவத்தைப் பற்றியும் படியுங்கள். பிரசுரங்களையும் படியுங்கள். கதைகளையும் படியுங்கள். இதன் மூலம் மொழிகளைப் பற்றிய அறிவு ஏற்படுகிறது. அறிவு விரிவடைகின்றது. மேலும் அன்னார் என்னிடம், நீங்கள் மொழியாக்கப் பணிகளை செய்கின்றீர்கள். எனவே இது உங்களுக்கு மிக முக்கியமாதாகும் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களது எண்ணத்தின்படி இந்த சொல்லின் பொருள் என்னவாக இருக்க வேண்டும் என்று ஒரு முறை நான் கஷ்டமான சொல்லிற்கு ஆங்கிலத்தில் பொருளை கேட்டேன். அதற்கு மியான் சாஹிப் சிந்தித்தார்கள். பிறகு இரண்டு மூன்று சொல்லை கூறினார்கள். அதற்கு நான் மியான் சாஹிபிடம், ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஓர் இடத்தில் இந்த சொல்லிற்கு

ஆங்கிலத்தில் இவ்வாறு மொழியாக்கம் செய்துள்ளார்கள் என்று கூறினேன். இதைக் கேட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் இது முற்றிலும் சரியாகும். இதுதான் இதற்கான சரியான மொழியாக்கமாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சவுத்ரி சாஹிப் மீது மிகுந்த கண்ணியம் மற்றும் மிகுந்த பிடிப்பை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள்: அன்னாரது மொழி மிகவும் சிறப்பானதாக இருந்தது. எனவே நீங்கள் இந்த சொல்லை பயன்படுத்துங்கள் என்று கூறினார்கள்.

அயாஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எப்போதும் பார்த்துள்ளேன். அதாவது மியான் சாஹிப் தனது அறிவு மற்றும் புரியும் திறன் ஆகியவற்றை காலத்தின் கலீஃபாவிற்கு முன்பாக ஒன்றுமற்றதாகவே கருதி வந்தார்கள். முதலில் தனக்கு ஏதாவது கருத்து இருந்தாலும் காலத்தின் கலீஃபா இந்த கருத்தை கூறியுள்ளார்கள் என்று கூறினால், இதுதான் சரியாது. நான் தவறு செய்துள்ளேன். ஹுஸூர் எதைக் கூறினார்களோ அதுவே சரியானது என்று கூறுவார்கள்.

மேலும் இவ்வாறு அன்னார் மீண்டும் மீண்டும் எனக்கு இந்த பாடத்தை கற்றுத் தந்துள்ளார்கள். அதாவது காலத்தின் கலீஃபாவிற்கு முன்பாக மற்ற அனைத்து கூற்றுகளும் வீணானவையாகும். மேலும் காலத்தின் கலீஃபா கூறுகின்ற கருத்தே சரியானதாகும். மேலும் அதன்படி செயல்படுவது நமக்கு அவசியமாகும்.

ரஷ்யன் டெஸ்கின் பணியாளர் ஷேக் நஸீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மியான் சாஹிபோடு வகாலத் இஷாத்தில் 16 ஆண்டுகள் கழித்துள்ளேன். நான் அவர்களிடம் பலவற்றை கற்றுள்ளேன். எப்போதும் பரிவு காட்டக்கூடிய ஒரு நண்பராகவே அன்னாரை பெற்றேன். அன்னார் ஒருபோதும் என்னை அவர்களுக்கு கீழ் பணி செய்யக் கூடியவன் என்ற உணர்வை என்னிடத்தில் ஏற்படுத்தியதில்லை. எப்போதாவது எனக்கு எனது பெற்றோர்கள் இல்லை என்ற உணர்வு ஏற்பட்டால் நான் அந்த இடத்தில் இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள் என்று எப்போதும் அவர்கள் கூறி வந்தார்கள்.

மேலும் இவர்கள் எழுதுகின்றார்கள்: அனைத்து பணியாளர்களிடமும் அன்னார் பரிவுடன் நடந்து கொண்டார்கள். எப்போதாவது எனது தவறின் காரணமாக என்னை கொஞ்சம் கடிந்து கொண்டால் அதை நினைவில் வைத்திருப்பார்கள். மறுநாள் என்னை நீங்கள் மன்னித்து விட்டீர்களா? என்று கேட்பார்கள்.

நான் அவர்களிடம், மியான் சாஹிப் நீங்கள் எப்போது என்னை திட்டினீர்கள் என்ற உணர்வே எனக்கு இல்லை என்று கூறுவேன்.

கோபம் வந்தால் முற்றிலும் அமைதியாகி விடுவார்கள். அப்போது மியான் சாஹிப் கோபத்தில் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரிந்து விடும். ஆனால் பிறகு சிறிது நேரத்தில் வேறுவொரு பணி காரணமாக ஃபோன் வந்து விடும். எந்தவொரு விஷயத்தையும் உள்ளத்தில் வைக்க மாட்டார்கள். மேலும் எப்போது காலத்தின் கலீஃபா, கலீஃபத்துல் மஸீஹிடமிருந்து ஏதாவதொரு பணி தொடர்பான பொறுப்பு கொடுக்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட பணியாளர்களுடன் மீட்டிங் நடத்தி வழிமுறைக்கேற்ப அதனை செய்ய முடிவெடுப்பார்கள்.

மேலும் மிகவும் கடினமான பணியை தமது பொறுப்பில் எடுத்துக் கொள்வார்கள். மேலும் நோயுற்றிருந்தாலும் வீட்டில் இருந்தவாறே அந்த பணிகளை முழுமை செய்வதற்கு முயற்சி செய்வார்கள். அலுவலகத்திற்கு வருகை தர இயலாது என உணர்ந்தால் பணியாளரை வீட்டிற்கு அழைப்பார்கள். மேலும் அங்கேயே அலுவலக வேலையை செய்வார்கள். ஓய்வு மற்றும் விடுமுறைக்கான எந்த எண்ணமும் இருந்தது கிடையாது. கட்டியில் படுத்தவாறே மொழியாக்கம் செய்வார்கள். பல முறை என்னுடன் சைக்கிளில் அமர்ந்தவாறு அலுவலகத்திற்கு வந்துள்ளார்கள்.

இஷாஅத்தின் பணியாளர் ஸாஹிது மஹ்மூது மஜீத் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மதிப்பிற்குரிய மியான் சாஹிப் அவர்களோடு பணி செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னார் கிலாஃபத்திற்காக தம்மைத்தாமே அர்ப்பணிக்கக் கூடியவர்கள். ஃபேக்ஸ் எழுத வேண்டிய வந்தால் (என்னைக் குறிப்பிடுகின்றார்கள்) ஒரு குறிப்பான நிலை அன்னாரிடம் ஏற்பட்டு விடும். ஏதாவதொரு பணி இங்கிருந்து என் சார்பாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அதை முழுமை செய்வதற்காக துடிப்புடன் செயல்படுவார்கள். அதற்கு உடல்நலம் இடையூறாக இருக்குமேயானால் மிகுந்த கவலைப்படுவார்கள்.

மஹ்மூது மஜீது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: எனது சிறுநீரகத்தில் கல் இருந்தது. இதற்கான அறுவை சிகிச்சை ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் நடைபெற்றது. எனது தந்தை கூறினார்கள். எப்போது வரை எனக்கு அறுவை சிகிச்சை முடியவில்லையோ அப்போது வரை மியான் சாஹிப் ஆப்ரேஷன் தியேட்டருக்கு வெளியே நடந்து கொண்டிருந்தார்கள். மேலும் துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

இஷாஅத்தன் பணியாளரான முஹம்மது தீன் பட்டி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்களுடன் 1955 முதல் மரணம் வரை பணியாற்றக்கூடிய நற்பாக்கியத்தை பெற்றுள்ளேன். மர்ஹூம் மியான் சாஹிப் பணியாளர்களோடு எப்போதும் நாகரிகமான முறையில் நடந்து கொள்வார்கள். எப்போது எந்த பணிக்காக அழைத்தாலும் நாற்காலியில் அமரும்படி கூறுவார்கள். அதற்குப்பிறகு பேச ஆரம்பிப்பார்கள். அவர்கள் பணியாளர்கள் மீது கோபத்தை வெளிப்படுத்தினால் பிறகு கூடிய விரைவிலேயே பரிவுடன் நடந்து கொள்வார்கள். எதுவரை என்றால் சில நேரங்களில் மன்னிப்பு கேட்கும் நிலைக்கு கூட வந்து விடுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை மியான் சாஹிப் ஏதோவொரு பணியை சென்னார்கள். நான் அதற்கு என்னால் முடியாது என்று கூறிவிட்டேன். இது நான் செய்த வரம்பு மீறுதலாகும். இருப்பினும் அவர்கள் என்னை மன்னித்தார்கள். அன்னார் என்னிடம், நீங்கள் இவ்வாறு பதில் அளித்திருக்கக்கூடாது என்று மட்டுமே கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சில நாட்கள் முட்டுக்காலில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக குறித்த நேரத்திற்கு அலுவலகத்திற்கு வர இயலாதவனாக இருந்தேன். குறித்த நேரத்தில் வராததினால் எனது வருகை பதிவேட்டில் கிராஸாக கோடு போடப்பட்டு விடும். இவ்வாறு சில கிராஸ்கள் போடப்பட்டால் பிறகு அது ஒரு நாள் விடுமுறை என்று கணக்கிடப்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மியான் சாஹிப் அவர்கள் வகீல் சாஹிப் அஃலாவிடம் இவருக்கு இந்த கஷ்டம் இருக்கிறது. எனவே இவருக்கு கிராஸ் போட வேண்டாம் என எனக்காக பரிந்துரை செய்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மியான் சாஹிப் அவர்கள் ஏழை மாணவர்கள் மற்றும் ஆதரவற்றவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோரை குறிப்பாக கவனித்து வந்தார்கள். மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் கல்விச் சீருடையை வாங்கிக் கொடுப்பார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலைக்காக பரிந்துரை செய்து கடிதங்கள் கொடுத்து வந்தார்கள்.

கானாவின் முரப்பி இஹ்ஸானுல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்: அவர்களுடன் 9 வருடங்கள் வகாலத் இஷாஅத்தில் பணி செய்துள்ளேன். கிலாஃபத்தின் மீது அன்பு, மரியாதையோடு நடந்து கொள்ளக்கூடிய நபராவார்கள். ஒரு முறை என்னை அழைத்து தனக்கு அருகில் உட்கார வைத்தார்கள். ஹுஸூர் அவர்களுக்கு கடிதம் எழுதுகின்றேன். இதை இப்போது ஃபேக்ஸ் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹுல் ஹாமிஸ் அய்யதஹுல்லாஹு தஆலா என்று எழுதியவாறு அந்த சொற்களை சில நிமிடங்கள் வரை பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பிறகு கிலாஃபத் தொடர்பாக உணர்ச்சிப் பொங்க கூற்றுக்களை கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தமக்கு கீழ் பணி செய்பவர்களுடன் பரிவுடன் நடந்து கொள்ளக்கூடிய ஒரு வியக்கத்தக்க தொடர்பு இருந்தது. எவரையும் தனக்கு முன்னால் நிற்க விட மாட்டார்கள். கடுமையான நோய் மற்றும் பலவீனம் இருந்தபோதிலும் அவர்களிடம் மகிழ்ச்சி நிலைபெற்றிருந்தது. எவரையாவது ஒரு நாள் திட்டினாலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஆறுதல் கூறுவார்கள். எந்த அளவுக்கு என்றால்

சில நேரங்களில் அதனால் வெட்கம் ஏற்படும். ஆனால் உண்மையில் அவர்கள் திட்டியது என்று குறிப்பிடுவது எதனை என்றால் அவர்களது குரலின் ஓசை சற்று அதிகமாகி விடும். அவ்வளவுதான். கடினமான வார்த்தையோ, உள்ளத்தை காயப்படுத்துகின்ற வார்த்தையோ அவர்கள் கூற மாட்டார்கள். எவரையாவது அலுவலகத்தில் கடுமை காட்டுவதைக் கண்டால் அந்த வழிமுறையிலிருந்து விட்டு விடுமாறு கூறுவார்கள்.

ஜாமிஆவின் ஹதீஸ் துறையின் ஆசிரியர் முஹம்மது தல்ஹா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஏறக்குறைய ஒரு வருடம் மதிப்பிற்குரிய மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிபிடம் எனக்கும் மதிப்பிற்குரிய முரப்பி சய்யிது ஃபஹது சாஹிபிற்கும் ஹதீஸ் படிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னாரது இதர பொறுப்புகள் மற்றும் ஆரோக்கியமற்றவர்களாக இருந்த போதிலும் எந்தவொரு நாளும் ஹதீஸின் வகுப்பு நடைபெறாமல் இருக்கக்கூடாது என்பதே அன்னாரது முயற்சியாக இருந்தது. ஒரு நாள் உடல்நலம் அதிகமாக மோசமடைந்தததன் காரணமாக அன்னார் அலுவலகத்திற்கு வர இயலவில்லை. எனவே எங்களை படிப்பதற்காக தமது வீட்டிற்கு அழைத்தார்கள்.

முரப்பி ஆஸிஃப் உவைஸ் சாஹிப் வகாலத் இஷாஅத் அவர்கள் எழுதுகின்றார்கள்:

எனக்கு சில மாதத்திற்கு முன்பாகவே வகாலத் இஷாஅத்தில் பணிநியமனம் ஏற்பட்டது. இந்த சில மாதங்கள் எனது வாழ்க்கையில் நினைவு கூறத்தக்கதக்க நாட்களாகும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மியான் சாஹிப் அவர்கள் மிகுந்த பரிவுடன் எங்களை கருத்தில் கொள்வார்கள். எனது மற்றும் அவர்களது வயதிற்கு ஏறக்குறைய குறைந்தது 25 வருடங்கள் வித்தியாசம் இருக்கின்றது. ஆனால் பெயர் அளவில் மட்டும் தான் இந்த வித்தியாசம் இருக்கிறது என்ற உணர்வு அவர்களுடன் இருக்கும் போது இருந்தது. அவர்கள் சிறந்த முறையில் கலந்துரையாடுவார்கள். சபையை மகிழ்ச்சிகரமானதாக வைப்பதற்கு பெரும்பாலும் நகைச்சுவை கூறுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களது மொழிபெயர்ப்பான முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் எனது பொறுப்பில் இருந்தது. இந்த வயதிலும் மற்றும் உடல்நலம் கடுமையாக பாதிப்பிற்கு உள்ளாகி இருந்தபோதிலும் தொடர்ச்சியாக அவர்கள் பணியை செய்து வந்தார்கள். அன்னாரது இந்த துணிவானது போற்றத்தக்கதாகும். பணியை முடிக்க முடியாது என்ற எண்ணம் அவர்களுக்கு அருகில் கூட கடந்தது கிடையாது.

ரப்வாவின் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர் முஹம்மது காஷிஃப் கூறுகின்றார்கள்:

நான் காலத்தின் கலீஃபாக்களின் தனிச்செயலர் தொடர்பாக எனது கட்டுரையை எழுத கடந்த பல மாதங்களாக அன்னாரை சந்தித்துள்ளேன். அல்ஹம்துலில்லாஹ். அவர்கள் என்னிடம் அன்பு செலுத்தியவாறு தனது விலைமதிக்கத்தக்க நேரத்தை செலவிட்டார்கள். நோயுற்றிருந்த போதும் நீண்ட நேர்காணலை வழங்கினார்கள். அன்னார் உருக்கமாக, மனிதனது முயற்சி ஒன்றுமே கிடையாது. இதுவே எனது வாழ்க்கையின் சாராம்சமாகும் என்று கூறினார்கள். அதாவது எது இருக்கிறதோ அது அல்லாஹ்வின் அருளாகும். பிறகு கிலாஃபத்தோடு தொடர்பாகும் என்று கூறினார்கள்.

ரப்வாவிலிருந்து ஆஸிஃப் அஹ்மது ஜஃபர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

மரணத்திற்கு சிறிது காலம் முன்பு தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் இருந்தார்கள். அவர்களைக் காண்பதற்கான நான் சென்றேன். கடுமையான கஷ்டத்திலும் அவர்களது முகத்தில் மாஸ்க் போடப்பட்டிருந்தது. அது ஆக்ஸிஜன் பொருத்தப்பட்டதாக இருக்கும். நான் என்னை அறிமுகம் செய்தேன். அவர்கள் சுயமே தனது மாஸ்கை கழற்றி விட்டு பேச ஆரம்பித்தார்கள். நான் அவர்களிடம், மியான் சாஹிப் உடல் நிலையில் அல்லாஹ் அருள் செய்வான். இன்ஷா அல்லாஹ் என்று கூறினேன். அதற்கு அவர்கள், அல்லாஹ் அழைத்துக் கொள்வதும் ஓர் அருளே ஆகும் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் இந்த கூற்றை கேட்டு இந்த நிலைமையில் கூட அல்லாஹ்வின் மீது அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையைப் பார்த்து நான் வியப்படைந்தேன். அவர்களுக்கு மரணத்தின் மீது எந்த கவலையும் இருக்கவில்லை.

கிலாஃபத்தோடு அவர்களுக்கு இருந்த தொடர்பு பற்றி பல மக்களும் எழுதியுள்ளார்கள். இதில் எவ்வித மிகைப்படுத்துதலும் இல்லை. மாறாக இதை விட அதிகமாக இவர்களது தொடர்பு இருந்தது. மேலும் தனது ஒவ்வொரு செயல் மூலமாகவும், தமது ஒவ்வொரு முன்மாதிரியின் மூலமாகவும் இந்த தொடர்பை வெளிப்படுத்தினார்கள்.

மாறாக, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உள்ளூர் அமீராகவும், நாஸிர் ஆலாவாகவும் என்னை நியமித்த போது அந்த நேரத்தில் கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் முழுமையாக அமீருக்கு கட்டுப்பட்டு நடந்தார்கள். மிகுந்த கண்ணியம் வழங்கினார்கள்.

நான் அவர்களை விட 13,14 வயது குறைந்த வயதை உடையவனாக இருந்தேன். அப்போதும் அவர்கள் முழுமையாக கட்டுப்பட்டு நடந்தார்கள். மேலும் எப்போதும் விசுவாசத்தின் முன்மாதிரியை கிலாஃபத்திற்குப் பிறகும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். மேலும் கட்டுப்படுதலில் முழுமையான முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள்.

அல்லாஹ் இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக. மஃபிரத் வழங்குவானாக. மேலும் அல்லாஹ்வின் அருளை பெறுவதற்காக இவர்கள் எதை வெளிப்படுத்தினார்களோ அல்லாஹ் அவர்களது விருப்பத்தை முழுமை செய்வானாக. அவனது அன்பிற்குரியவர்களோடு இடமளிப்பானாக. மேலும் இவர்களது குழந்தைகளுக்கும் கிலாஃபத்துடன் விசுவாசத்திற்கான தொடர்பை வைத்திருக்கக் கூடியவர்களாக ஆக்குவானாக. இவர்கள் மதிப்பிற்குரிய மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்கள் மரணமடைந்தபோது ஒரு கனவு கண்டார்கள். அதை நானும் அதை குத்பாவில் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் எனக்கு எழுதியிருந்தார்கள்.

அதாவது நேற்றைக்கு முந்தைய நாள் மியான் சாஹிபின் மரணம் நிகழ்ந்தது. அப்போது நான் கனவு பார்த்துக் கொண்டிருந்தேன். அதாவது குர்ஷீத் மற்றும் மியான் அஹ்மது அல்லாஹ்விடத்தில் சென்று விட்டார்கள். மேலும் அவர்களது சந்திப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் நடைபெறுகிறது. அப்போது எனது உள்ளத்தில், அல்லாஹ் எனது சந்திப்பையும் இவ்வாறே ஆக்குவானாக என்ற விருப்பம் தோன்றியது. அப்போது நான், அல்லாஹ்வே! என்னையும் உனது நெருக்கத்தில் அழைத்துக் கொள்வாயாக என்று கூறினேன். பிறகு அல்லாஹ் நீங்கள் முன்னே வாருங்கள் என்று கூறினான்.

இவ்வாறு அல்லாஹ் தனது நெருக்கத்தில் இடமளித்தான். அவர்களுக்கு மஃபிரத்தை வழங்கினான். அவர்கள் மீது கருணை காட்டப்படுவது தொடர்பான செய்தியை அவர்களுக்கே வழங்கினான். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இவர்களது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் இவர்களது சந்ததிகளும் நல்லவர்களாக ஆவார்களாக.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

“ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் கொடுங்கோல் அரசர்களுடன் தொடர்புபடுத்தி கலீஃபா என்ற சொல்லைக் கூற விரும்பவில்லை. ஏனென்றால், கலீஃபா உண்மையில் ரஸூலின் நிழலாக இருக்கின்றார்”

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 353)

**:பைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 24 January 2019 Issue No. 4

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

போதிய வசதி இல்லாததனால் விருந்தாளிகளுக்குத் தேவைப்படக்கூடிய வசதியான வீடு அமையவில்லை. தேவையான அளவுக்கு கட்டில்களுக்கான ஏற்பாடும் இல்லை. பள்ளிவாசலை விரிவுபடுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. பிரசுரங்கள் பிரச்சார விஷயத்திலும் நமது நிலை விரோதிகளை விட மிகவும் பலவீனமாலகவே இருக்கிறது.கிறிஸ்தவர்களின் சார்பாக மாதம் ஐம்பதாயிரம் பத்திரிகைகளும் மத சந்பந்தமான பிரசுரங்களும் பிரசுரமாகும்போது நமது சார்பாக மாதாமாதம் ஆயிரம் பத்திரிகை தொடர்ச்சியாக வெளியிட முடியவில்லை.

ஆகவே இப்பணிகளுக்காக பைஅத் செய்த ஒவ்வொருவரும் இறைவன் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து அவர்களால் முடிந்தவரை கூடுதலாகப் பணவுதவி செய்ய வேண்டும். குறைந்த உதவியாக இருந்தாலும் மாதாமாதம் தடை இன்றி வந்து கொண்டிருக்க வேண்டும். இவ்வுதவி நீண்ட காலம் வரை மறந்து விட்டு ஏதாவதொரு நேரத்தில் தானாகவே செய்யும் உதவியை விட மேலானதாகும். ஒவ்வொரு மனிதனின் உண்மைத் தன்மையும் அவனது சேவையைக் கொண்டே அறியப்படும்.

அன்பிற்குரியவர்களே! இது மார்க்க வளர்ச்சிக்காகவும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்கான தருணமாகும். இத்தருணத்தை ஒரு பாக்கியமாக கருதுங்கள். இது பின்னர் ஒருபோதும் உங்கள் கைக்கு வரப்போவதில்லை. ஸக்காத்து கொடுக்கக் கூடியவர் தனது ஸக்காத்தை இவ்விடத்திற்கே அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வீணாகச் செலவு செய்வதிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இறைவனது அருட்கொடைகளையும் ரூஹுல் குத்ஸ் என்னும் பரிசுத்த ஆவியின் சன்மானத்தையும் பெற ஒவ்வொரு விதத்திலும் உள்ளத் தூய்மையுடன் செயல்படுங்கள். ஏனெனில் இந்த ஜமாஅத்தில் சேர்ந்தவர்களுக்காகவே இந்த சன்மானம் இருக்கிறது.

நமது நபி (ஸல்) அவர்களுக்குத் தோற்றமளித்த பரிசுத்த ஆவியின் தோற்றமானது மற்றவர்களிடம் தோற்றமளித்ததை விட மேன்மையானதாகும். பரிசுத்த ஆவி சில நேரம் ஒரு நபி மீது புறாவின் உருவத்தில் வெளியானது. சில நேரம் இன்னொரு நபி அல்லது அவதாரத்தின் மீது பசுவின் உருவத்தில் வெளியானது. சிலர் மீது ஆமை, மீன் உருவத்தில் வெளியானது. பரிபூரண மனிதரான நமது நபி (ஸல்) அவர்கள் தோன்றாதவரை மனித உருவில் தோன்றக்கூடிய நேரம் வரவில்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றிய போது அவர்கள் முழுமையான மனிதரான காரணத்தால் பரிசுத்த ஆவியும் அவர்கள் மீது மனிதனின் உருவிலேயே வெளியானது.

இதனால் பரிசுத்த ஆவியின் சக்தியான தஜல்லி என்னும் சிறப்பும் வலிமையும் கொண்ட பிரகாசமானது பூமியிலிருந்து வானத்தின் எல்லை வரை நிரம்பி விட்டது. இதனால் திருக்குர்ஆனின் போதனையானது இணை வைப்பதில் இருந்து பாதுகாக்கப்பட்டது. ஆனால் கிறித்தவ மதத்தின் வழிகாட்டி மீது பரிசுத்த ஆவி மிகவும் பலவீனமான புறாவின் உருவில் வெளியானதால் தூய்மையற்ற ஆவியான ஷய்த்தான் இம்மதத்தை வென்று விட்டான். அவன் தனது பெருமையையும் சக்தியையும் ஒரு பெரும் மலைப்பாம்பு தாக்குவதைப் போன்று வெளிப்படுத்தினான். இதன் காரணத்தாலேயே திருக்குர்ஆன் கிறிஸ்தவர்களது வழிகேட்டை உலகத்திலுள்ள அனைத்து வழிகேடுகளிலிருந்தும் முதன்மையானதாக கணக்கிட்டுள்ளது. மேலும் மனிதனை இறைவனாகவும், இறை மகனாகவும் ஆக்கியிருப்பதன் மூலம் பூமியின் மீது ஒரு மாபெரும் பாவம் இழைக்கப்பட்டுள்ளதால் வானமும் பூமியும் உடைந்து சிதறுண்டு போகலாம் என்றும் அது கூறுகிறது.

திருக்குர்ஆனின் ஆரம்பத்திலும் கிறிஸ்தவர்களது கொள்கைக்கு மறுப்பு உள்ளது. மேலும் அவர்களது விஷயமும் இடம் பெற்றுள்ளது. எவ்வாறெனில் اِيَّاكَ نَعْبُدُ மற்றும் وَلَا الضَّآلِّيْنَ என்னும் திருவசனங்களிலிருந்து நன்கு விளங்கிக் கொள்ள முடியும். மேலும் திருக்குர்ஆனின் இறுதியிலும் கிறிஸ்தவர்களது கொள்கைக்கு மறுப்பு உள்ளது.

இதனை قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ- اَللّٰهُ الصَّمَدُ- لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ (112:2–4) என்னும் அதிகாரத்திலிருந்து புரிந்து கொள்ள முடியும். மேலும் திருக்குர்ஆனின் மத்திய பகுதியிலும் கிறித்தவ மதத்தின் குழப்பத்தைப் பற்றிய விஷயம் இடம் பெற்றிருக்கின்றது.

இதன் تكاذ السموات يتفطّرن என்னும் திருவசனத்திலிருந்து விளங்கிக் கொள்ள முடியும். உலகம் தோன்றிய காலத்திலிருந்து இதுவரை படைப்பினங்களை வழிபடுதல், வஞ்சித்தல் ஆகியவற்றின் முறைகளைப் பற்றி இதுபோன்று ஒருபோதும் வலியுறுத்தப்படவில்லை என்று திருக்குர்ஆனிலிருந்து விளங்குகிறது. இதன் காரணத்தாலேயே முபாஹலாவுக்காவும் (ஒருவர் மற்றவரின் மீது சாபத்திற்காக வேண்டி துஆச் செய்தல்) கிறிஸ்தவர்களே அழைக்கப்பட்டார்கள். வேறு எந்த இணை வைப்பவரும் அதற்காக அழைக்கப்படவில்லை.

இதற்கு முன் பரிசுத்த ஆவி, பறவைகள் மிருகங்களின் உருவில் வெளியாகிக் கொண்டிருந்ததன் இரகசியமென்ன? இதனை அறியக் கூடியவர்கள் தாமாகவே அறிந்து கொள்ளட்டும். நமது திருநபி (ஸல்) அவர்களது மனிதத்தன்மையானது மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்த காரணத்தால் அது பரிசுத்த ஆவியையும் மனிதத் தன்மையின் பக்கம் இழுத்து வந்தது என்ற குறிப்பை மட்டும் நாம் கூறிக் கொள்கிறோம். ஆகவே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்படிப்பட்ட ஒரு நபியைப் பின்பற்றுபவர்களாக இருந்து கொண்டே ஏன் உங்களது உற்சாகத்தை இழக்கிறீர்கள்?

நீங்கள் உண்மையிலும் தூய்மையிலும் நிலைத்து நிற்பதைக்கண்டு வானத்திலுள்ள மலக்குகளும் வியப்படைந்து உங்களுக்காக அவர்கள் துஆச் செய்வதற்குத் தகுந்தாற்போல் நீங்கள் உங்களின் முன்மாதிரியை எடுத்துக் காட்டுங்கள்.

உங்களுக்கு வாழ்வு கிடைப்பதற்காக ஒரு மரணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இறைவன் உங்கள் உள்ளத்தில் இறங்குவதற்காக, மன இச்சைகளை விட்டும் அதனை தூய்மைப்படுத்துங்கள். ஒரு பக்கத்தை முழுமையாகத் துண்டித்து விட்டு மற்றொரு பக்கத்தோடு முழுமையான முறையில் தொடர்பை ஏற்படுத்துங்கள். இறைவன் உங்களுக்கு உதவி புரிவானாக!

இப்போது இதனை முடித்துக் கொள்கிறேன். மேலும் எனது இந்த நற்போதனை எனக்கும் உங்களுக்கும் மிகவும் பயனுள்ள வகையில் அமையட்டுமாக! நீங்கள் இந்த பூமியின் நட்சத்திரங்களாக விளங்கும் பொருட்டு உங்களில் ஒரு நல்ல மாற்றம் உண்டாவதாக!த உங்களின் இறைவனிடமிருந்து உங்களுக்கு கிடைத்த ஒளியிலிருந்து இவ்வுலகம் பேரொளி பெறுவதற்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். ஆமீன் ஸும்ம ஆமீன்.

**(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 82–85)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad